385

உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

வால்யூம் 4. } 1905 ஹூ செப்டம்பர்மீ { புத்தகம் 9.

வித்தை XIV.

(முன் தொடர்ச்சி.)

சர்வகலாசாலை விஷயமாய் முன் சஞ்சிகையில் சிலசீர்திருத்தங் கூறினோம். இச்சஞ்சிகையிலும் அதுவிஷயமாகவே இன்னும் சில விஷயங்கள்கூறிப் பின் போதனைமுறைப் பாடசாலைகளைப் பற்றிப் பேசுவோம். நம்சென்னைச் சர்வகலாசாலை நம் இந்தியாவின் மற்றைச் சர்வகலாசாலைகளினும் உயர்தரமுள்ளதென்பது யாவருமறிந்ததே. ஆனால் அதன் சங்கத்தார் தங்களுக்கிருக்கும் அதிகாரத்தைமற்றைச் சர்வகலாசாலைச் சங்கத்தார்களைப்போல் உபயோகிப்பது அரிதினு மரிதாயிருக்கிறது. எம். ஏ., எல். எல். டி., என்ற பட்டப்பெயர்களை இச்சங்கத்தார் இதுகாறும் ஒருவருக்குக் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. நீடித்தகாலம் வித்தியாவிஷயத்தில் உழைத்துப் புகழ்பெற்ற காலஞ்சென்ற டி. கோபாலராயர் அவர்களுக்கே இவர்கள் எம். ஏ., பட்டம் கொடுக்கவில்லையென்றால் பிறருக்குக் கொடாததை நாம் குற்றங்கூறுவதில் யாதுபயன்? ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் முதலிய பிரசித்திபெற்ற கலாசாலைகளிலும் வருஷாவருஷம் தாராளமாகப் பலருக்குப் பட்டமளிக்கின்றனர். நம் சென்னைச் சங்கத்தார் அதுவிஷயத்தில் லோபம்பண்ணுவது சரியன்றாஎன்பது நம்கருத்து. நம் நாட்டில் பலர் மகாபுத்திமான்களாய் வித்தியாவிஷயத்தில் பாடுபட்டுவருகின்றனர். சர்க்கார் உத்தியோகவிஷயத்தில் உழைத்துவருகிறவர்களும் பலமுறை வித்தியாசாமர்த்தியத்தைக் காட்டிவருகின்

ருர்கள். அவர்களுக்கு எம். ஏ. பட்டமும் எல். எல். டி. பட்டமும் ஏன்கொடுத்துக் கௌரவப்படுத்தக்கூடாது? இப்பொழுது இச்சங்கம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இனியாவது மெம்பர்கள் இதுவிஷயம் நீளநினைந்து தம் ஆயுள்காலத்தை வித்தியாவிநோதத்தில் செலவிட்டுப் புகழ்பெற்ற நிபுணர்களுக்குத் தக்கபட்டப்பெயர்கள் அளித்துக் கௌரவப்படுத்துவார்களாக. இது நிற்க. இச்சங்கத்தார் கவனிக்கவேண்டிய மற்றோர் விஷயம்உண்டு. கலாசாலைகளில் ஆசிரியராயிருப்பவர் தங்கள்விடுமுறைநாட்களில் அந்நியநாட்டுக்கலாசாலைகளைப் போய்ப்பார்த்துவரப் பிரியங்கொள்ளும்பக்ஷத்தில் அன்னவர்களுக்கு ஊக்கமுண்டாகும்வண்ணம் செலவில் ஒருபாகத்தைத் தந்துதவுதற்கு ஏற்பாடுசெய்யவேண்டுவது இன்றியமையாதது. தேசயாத்திரையால் உண்டான நன்மைகளை அளவிடவுமுடியுமோ? உதாரணமாகச் சென்னை ஔஷதிசாஸ்திரம் கற்பிக்கும் ஓர் இளம்பருவ ஆசிரியர் ஸிம்லா, டேஹ்ரடூன், ஷஹரான்பூர், காஷ்மீரம், ஜயபுரி, இமயகிரி முதலிய இயற்கைவளம் செயற்கைவளம் அமைந்த இடங்களைச் சுற்றிப் பார்த்துவர விருப்பங்கொண்டால் அவருக்குச்சகாயம் கிடைக்கத் தற்காலம் யாதொரு ஏற்பாடுமில்லை. அவ்விடங்களைச் சுற்றிப்பார்த்துவரும்பக்ஷத்தில் அவர்மனம் எத்துணையோ விசாலப்பட்டு எவ்வளவோ நன்மைபயக்கக் கூடுமே. இவ்வண்ணமே ஒவ்வொரு சாஸ்திரபாடத்தையும் போதிக்கப்பட்டவர் அவ்வாறு அந்நியநாட்டுச் சஞ்சாரம் செய்துவருவார்களானால் தேசத்துக்கு உண்டாகும் நன்மைக்கு அளவுண்டோ? காக்ஷிசாலைகளைக் கண்ணுற்றுவந்தாலே பெருத்த நன்மைகள் உண்டாகுமே. வித்தியா இலாகாதார் புத்தகசாலைகளுக்கும் சாஸ்திரக்கருவிமுதலியன வாங்குவதற்கும் பாதி கிராண்டுகொடுத்துதவுகிறார்களே. அவ்விதமாகச் சர்வகலாசாலையாரும் வித்தியா இலாகாதாரும் கலந்து வீதத்துக்குக் காற்பங்காக அளப்பங்குகொடுத்துதவினால் பேருபகாரமாயிருக்கும். சிலர் இரண்டு மாதவிடுமுறையில் ஜப்பான், இங்கிலாந்து, ஆஸ்திரியா, பிரான்ஸ், ஜர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களுக்குப்போய்ச் சஞ்சாரம்செய்துவரக் கூடும். அவ்விடுமுறை நாட்களோடு பர்லோமுதலிய நெடுநாள் லீவும் எடுத்துக்கொண்டு இன்பமாய்ப் பொழுதுபோக்கி வித்தியாபிவிருத்தி செய்துவருவார்கள். இவ்விஷயங்களுக்கெல்லாம் ஏற்பாடுசெய்யாத

வரை ஆசிரியர்களின் மனோபக்குவம் பூர்ணமாகப்போகிறதில்லை. அவ்வாறனபக்குவம் இல்லாதவரை கல்வியின் உண்மையான தேர்ச்சியுண்டாகப்போவதில்லை. "பழையன கழிதலும் புதியனபுகுதலும் வழுவலகாலவகையினனே" என்றமூத்தோர் சொல்லைக்கடைப்பிடித்து இனியாயினும் ஒழுகுவார்களாக. அவ்வாறன நன்மைபயக்கும் விஷயங்களில் பொருளைச் செலவிடல் யுக்தமாகும். வருஷாவருஷம் சிற்சிலருக்கு உதவிசெய்தால் போதுமானது. இவைபோன்ற விஷயம் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. உபந்நியாசங்கள் ஏற்பாடுபண்ணவேண்டுமென்பது யூனிவர்ஸிடி கமிஷனுடைய முக்கிய கருத்துக்களில் ஒன்றும்.

இனி அவ்விஷயம் நிறைவேறு மென்று நம்புகிறோம். கலாசாலைகளிற் கல்வி கற்க வாய்க்காத சில நிபுணர்கள் அந்நிய வேலைகளில் ஏற்பட்டுச் சாஸ்திர ஆராய்ச்சியின் ஆனந்தத்தை இச்சன்மத்தில் அடையாமற் போகின்றனர். அன்னவர்களுக்கு இவ்வாறன உபந்நியாசங்கள் மிக்க பயனை அளித்து அறிவை அபிவிருத்தி செய்யும். அறிவைப்பரவச்செய்வதற்கு இஃதோர் முக்கிய சாதனமாம். "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாந்தலை" என்ற திருவாக்கால் அதன் பயன் நமக்கு விளங்கவில்லையா? மதாசாரியர்கள் தத்தம் மதக்கொள்கைகளைப்பல நாடுகள் சென்று பல ஜனங்களுக்குட் புகுந்து உபந்நியாசஞ்செய்து உலகம் நன்மை யடைந்ததை எவர் அறியார்? அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் இவ்வுபந்நியாசங்களே பிரதானமாய் அநுசரிக்கப்பட்டு வருகின்றன. சட்ட விஷயத்திலும் இவ்வேற்பாடு ஏராளமான நன்மைகளைப் பயக்கும். இவ்விதமான மனோவிசாலமான ஏற்பாடுகள் நம் சங்கத்தார் செய்யாதபடியால் நம்மவரில் பீ. ஏ. பரீக்ஷைகள் கூடத் தேருதவர்கள் சிலர் இங்கிலாந்து சென்று சட்ட உபந்நியாசங்களைச் சிலகாலம் இருந்து கவனித்துப் பாரிஸ்டர் பட்டம் வாங்கிக்கொண்டு வந்து விடுகின்றனர். 1-வது கிரேடு வக்கீல் பரிக்ஷைக்குப்போகவும் இடம் பெருதவர்கள் இங்கிலாந்திலிருந்து பாரிஸ்டர்களாக வந்து வித்தியா இலாகாதாரையும் சர்வகலாசாலையோரையும் அவமானத்துக் குள்ளாக்குகின்றனர். அம்மம்மா! வித்

தியா விஷயத்தில் இத்துணை கண்டிப்பும் சட்டமும் வேறு எந்நாட்டிலும் கிடையா! புத்தியின் விசால வளர்ச்சிக்கு இடையூறு யிராமல் சாமர்த்தியமுள்ள எவரும் எந்தப்பரீக்ஷைக்கும் போய்த்தேறலாமென்று இருந்தால் புத்திமான்கள் மிக்க அபிவிருத்தியடைவார்கள். புத்தி விசாலத்தை நாடுவதே சர்வகலாசாலையாரின் கடமையாம். அவ்வாறு செய்யாமலிருப்பதால் தான் குருட்டுப்பாடம் தலையெடுத்துக்கேட்டை விளைவிக்கிறது. இவை நிற்க.

அந்நியநாட்டுக்கலாசாலைகளில் ஏற்பட்டிருக்கும்விதம் வித்தியா விஷயத்திலே உழைத்துப்புதிதாக விஷயங்களைக் கண்டுபிடித்துக் கல்வியபிவிருத்தி செய்யவிருப்பங்கொண்டவர்களுக்கு நம்சர்வகலாசாலையில் யாதொருதக்கவேற்பாடுமில்லை. எத்தனையோ புத்திமான்களுடைய குசாக்கிரபுத்தி இவ்வேற்பாடில்லாமல் மழுங்கி ஒன்றுமில்லாமற் போகின்றன. அவ்வாறான ஏற்பாடுகளுக்கும் ஏதாவது வழி செய்யவேண்டும். தாதா என்ற கொடையாளி போல் எத்தனையோ கொடையாளிகளும் இவ்வரிய விஷயங்களுக்குப் பொருள் உதவி புரிந்து நாட்டின் நன்மையை நாடவேண்டும். சர்வகலாசாலையாரை மட்டும் குறை கூறுவதிற் பயனில்லை. நம் நாட்டுத் தனவந்தர்களும் கல்விமான்களும் இவ்விஷயத்தைச்சற்றுச் சீர்தூக்கிப்பார்த்துத் தக்க சீர்திருத்தங்களை உடனே உண்டு பண்ணும் வண்ணம் தக்க உதவி புரிவார்களென்று நம்புகிறோம். ஒவ்வொருவரும் தக்க கடமையைச் செய்ய முயலவேண்டும். அன்றே நாட்டுக்கு நன்மையுண்டாம்.

இனிப் போதனமுறைப் பாடசாலைகளைப்பற்றிப் பேசுவோம். தற்காலம் சைதாபேட்டையில் ஓர் உயர்தரப்போதனமுறைப் பாடசாலையும் அவ்வவ்ஜில்லாக்களில் கீழ்த்தரப்போதனமுறைப் பாடசாலைகளுமிருக்கின்றன. கீழ்த்தரப்பாடசாலைகளைச் சீர்ப்படுத்த ஆரம்பித்திருக்கின்றனர். ஒருவருஷப்பயிசிற்யை இரண்டு வருஷங்கள் ஆக்கியிருக்கின்றனர். எல். டி. பட்டம் பெற்றவர்களை இப்பாடசாலைகளுக்குத் தலைமை உபாத்தியாயர்களாக நியமனஞ் செய்திருக்கின்றனர். பிறர்பார்த்து மூக்கில்விரல்வைக்கும் வண்ணம் வெளிப்பகட்டானவேலைகள் நிரம்பநடந்து வருகின்றன. உண்மையில் காரியங்கள் சீர்திருந்துகிறதாகத் தோற்றவில்லை. போதன

முறைத்தொடர்ச்சி ஒருவருக்குஉடனே வந்துவிடாது. மிக்க அநுபவத்தின்மேல் வரவேண்டும். ஓராண்டு அல்லது ஈராண்டு நார்மல் பாடசாலைகளில் வாசஞ்செய்துவிட்டு ஆசிரியர் முத்திரைபெற்றதால் சகலசக்தியும் ஒருவருக்குமேலிருந்து இறங்கிவிடாது. போதனுமுறைகளைச்சிறிதும் அறியாதவர்களுக்கு அவ்விதப்பயிற்சி இன்றியமையாததே. ஆனல் அப்பயிற்சி அவர்களைப் பூரணசுக்தியுடையவர்களாகச் செய்துவிடமாட்டாது. நெடுநாள் அனுபவத்தாலேயே அச்சக்தியுண்டாகவேண்டும். அப்பொழுதே அவர்களுக்கு உண்மையானதேர்ச்சி வந்ததாகக்கருதவேண்டும். நார்மல்பாடசாலைகளில் ஒரு நிமிஷமும் நுழையாத அநேக ஆசிரியர்கள் போதனுமுறைகளில் முதல்தரத்தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களைச் சரிவரமதிப்பதில்லை. ஆயுள்வரை அவர்களை அறியாதவர்களாகவே கருதுகிறார்கள். வித்தியா இலாகாதாரும், நெடுநாள் அனுபவமுள்ளவர்களாயிருந்தாலும் அவர்களுக்குக் குறைந்த திரவியசகாயமும் நார்மல்பாடசாலை மிதித்துவந்த எத்திறத்தாருக்கும் அதிக திரவிய சகாயமும்செய்துவருவது அநீதமே. இருதிறத்தாருக்கும் வித்தியாசம் வைத்துக்கொண்டு சகாயம்செய்வதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. அநுபவத்தையும் நிபுணத்துவத்தையும் மதித்தே இச்சகாயம் செய்யவேண்டுமேயொழிய குருட்டுத்தனமாய் ஒரேவிதியையனுசரிப்பதில் யாதுபயன்? நார்மல்பாடசாலையே சிறிதும் அறியாத காலஞ்சென்ற கோபாலராயர் முதலிய வித்வ சிகாமணிகள் உலகம் மெய்ச்சிய உத்தம ஆசிரியர்களாயிருந்து வரவில்லையா? இப்பொழுதும் அநேகபண்டிதர்கள் தமக்குத்தெரிந்தபாஷைகளை உத்தமமாக எவரும் மெய்ச்சும்வண்ணம் போதிக்கவில்லையா? இயற்கையிலேயே ஆசிரியத்தன்மை ஒருவருக்கு உண்டாகிறதே ஒழிய செயற்கையினல்மட்டும் வந்துவிடாது. இது நிற்க. பலநிபுண ஆசிரியர்களுடைய போதனையைக் கவனிப்பதால் போதனுசக்தி யுண்டாகக்கூடும். அவ்வாறன சக்தியை அடைவதற்குத்தக்க ஆசிரியர்களுக்குத் திரவிய சகாயம்செய்து பலவிடங்கவிலுள்ள கலாசாலைகளுக்குப்போய் ஆங்கு நடக்கும் போதனைமுறைகளைக் கவனித்துவரும்படிசெய்தால் நலமாயிருக்கும். அவ்வாறின்றி ஒரே இடத்திலிருந்துகொண்டு இரண்டொருவருடைய போதனைகளைக்கவனித்தால் போதுமா? முதலில்

தக்கநிபுணர்களுடைய முறைகளைக்கூர்ந்துகவனித்தல்வேண்டும். கவனித்த விஷயங்களை அநுபோகத்திற்குக் கொண்டுவந்து நெடுநாள் பழகவேண்டும். அப்போழுதே அவ்விஷயத்தில் பூரணசக்தியடைந்தவர்களாக எண்ணப்படுவார்கள். அவர்களுக்கே அதிகம் திரவிய சகாயம் செய்யவேண்டும். திரவியசகாயம் செய்வதிலும் காலக்கிரமத்தில் அதிகரித்துக்கொண்டு வரவேண்டுமே ஒழிய ஒரேதடவை கொடுத்துவிடக்கூடாது. அநுபவமுள்ளவர்களுக்கு எப்பொழுதும் அதிகமதிப்பு இருத்தல்வேண்டும். எந்தவிஷயத்திலும் சாமர்த்தியமும் அநுபவமும் மதிப்புப்பெறவேண்டியதே. வித்திபாபோதனை விஷயத்திலோ அவைகளைப் பன்மடங்கு மதிக்கவேண்டும். அவ்வாறுசெய்வதில்லை. உதாரணமாக ஒருவர் நார்மல்பாடசாலையில் பயிலாதவர் என்றுவைத்துக்கொள்வோம். மற்றொருவர் நார்மல்பாடசாலைக்குப்போய்த் தேர்ச்சிபெற்றவர். இவர்களில் முற்கூறியவர்க்குச் சாமர்த்தியமும் அநுபவமும் அதிகம். வித்தியா இலாகாதார் அனைவரும் மெய்ச்சும்படியான வேலைத்திறமை வாய்ந்தவர். 30 வருஷ அநுபோகமுமுள்ளவர். பின்னர்கூறப்பட்டோர் சாமான்யமானவர். அவரது போதனைமுறையைச் சிலாகிப்பவர் எவரும் இல்லை. தற்காலவிதிப்படி பின்னர் கூறப்பட்டவருக்கு மூன்றில் ஒருபங்கு சகாயமும் முன்னர் கூறப்பட்டவருக்கு நான்கில் ஒருபங்கு சகாயமும் கிடைக்கும். இவ்விதியை யநுசரிப்பது நியாயமாகுமா? இவைகளைச்சீர்திருத்தவேண்டுவது இன்றியமையாதது.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபை.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் இருபத்திரண்டாவது வருஷோற்சவம் நிகழும் கன்னிரவி 2உ ஷெயூர் திருஞானசம்பந்த சுவாமிகள் மடாலயத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. இச்சபையார்கள் காலை 7-மணி தொடங்கித் தமிழ்வேத பாராயணத்துடன் வீதிவலம் வந்து சிவாலய தரிசனம் செய்து மடாலயத்துட்புக்கு அறுபத்துமூன்று நாயன்மாரையாராதித்து நண்பகலில் மகேசுவரபூஜைநடத்தினார்கள். இதற்கு அக்கிராசனாதிபதியாக வேண்டப்பட்ட மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதியவர்களும் செந்தமிழ்நாட்டுப் பிரபு சிகாமணியும் ஆகிய ஸ்ரீமாந்-பொ. **பாண்டித்துரைஸாமியவர்கள்** அன்றுதினம் மாலை 4-மணி ரயிலில் வந்தார்கள். இவர்களது நல்வரவை யறிந்த சைவாபிமானிகளும் தமிழபிமானிகளும் ரயில்வே பிளாட்பாரத்தில் குழுமிநின்று மேளவாத்தியத்துடன் வாழ்த்தியுபசரித்து அழைத்துச்சென்றார்கள். பந்தல், ரிஷபக்கொடி, தீபவரிசை, முதலிய பலவகையிலும் அலங்கரிக்கப்பெற்றிருந்த அம்மடாலயத்தில் மாலை 6 மணிக்குச் சபைகூடிற்று. முதலிற் கடவுள் வாழ்த்துத் தமிழ்வேத பாராயண முடிந்தவுடன் சபையின் காரியதரிசி யவர்களால் அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பெற்றது. சபையாரின் விடாமுயற்சியையும், ஊக்கத்தையும், சுமார் 80 பிரசங்கங்கள் நடந்திருக்கும் சிறப்பையும் தமிழ்வேதபாடங்கள் கேட்கும் மாணாக்கர்களுக்கும் பெற்றோர்கட்குமுளதாய அன்பின் விசேடத்தையும்பற்றி மதுரை விவேகபாநுப் பத்திராதிபர் மகா-௱-௱-ஸ்ரீ எம். ஆர். **கந்தசாமிக்கவிராயரவர்கள்** வியந்தெடுத்துக்கூறினார்கள். அப்பால் அக்கிராசனாதிபதியவர்கள் **சைவசித்தாந்தம்** என்றவிஷயத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கி உலகத்தில் பலவகையான சமயங்களிருத்தற்குக் காரணமும் அவற்றால் பெறத்தகும்பயனும் எடுத்துக்கூறிச் சைவசித்தாந்தமானது எல்லாமதங்களையும் சோபானக்கிரமமாகக்கொண்டு தான் மேனிற்பது எனவும் பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தங்களும் அநாதியேயுள்ளனவாதல் அவசியமே எனவும் மிகச்சிறந்த பற்பல நூல்களினின்று தெளிவான உதாரணங்களுடன் சபையாருள்ளங்குளிர ஒன்றரைமணி நேரம்வரை இனிதுபிரசங்கித்தார்கள் அப்பால் அக்கிராசனாதிபதியவர்கட்குப் பூமாலைசாத்தி வாழ்த்துக்கூறிச் சபையோர்க்கும் வந்தனங்கூறித் தேவாரம்பாடிச் சபைகலைந்தது.

மறுதினம் மாலை 6மணிக்கு மறுபடியும் முன்போலவே சபைகூடிற்று. ஸ்ரீமாந்-பொ. **பாண்டித்துரைஸாமியவர்களே** அக்கிராசனம் வகித்தார்கள், தமிழ்வேத பாராயணம் நடந்தது. மகா-௱-௱-ஸ்ரீ எம். ஆர். **கந்தசாமிக்கவிராயர்** அவர்கள் **கல்வி** என்னும் விஷயத்தைப் பிரசங்கிக்கத்தொடங்கி அத

ன் சிறப்பையும், அஃதில்லாமையால் வரும் இழிவையும் கற்கும் முறையையும், கற்றெய்தும் பயனையும் பல மேற்கோள்களுடன் தெளிவாக விரித்துரைத்தார்கள். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்து முற்பிரசங்கத்தைப்பற்றிச் சிறிதுபேசிவிட்டுத் தமிழ்ப் பெருமையைப்பற்றி யுபந்நியசிக்கத் தொடங்கி வடமொழி தோன்றியகாலத்தே தமிழும் உளவாதல்வேண்டுமென்பதையும், வடமொழியில் திராவிடமென்னுஞ் சொல் இருத்தலே அதற்குத்தக்க சான்றென்பதையும், வடமொழி போலவே தேவோற்பத்திபெற்று முனிவரால் வழிப்படுத்தி வளர்க்கப்பெற்று நிரம்பிய இலக்கணமுடையதாகி இனிமை பயந்து நிற்கும் பெருமையையும் மூவேந்தரால் ஆதரிக்கப்பெற்றுத் தன்னிகரில்லாத் தலைமைபெற்றிருந்த மாண்பையும், இக்காலத்து ஆங்கிலங்கற்றார் சிலர் அதனை அவமதித்தல் அடாச்செய்கையே என்பதனையும், சுயபாஷாபிமானமே எனைத்தேசாபிமானம் மதாபிமானங்கட்கு மூலமாகுவதென்பதனையும், வரிசைக்கிரமமாகக்கொண்டு கடல்மடை திறந்தாற்போல் திவ்யப்பிரசங்கஞ்செய்து சபையார் குதூகுலிக்கச்செய்தார்கள். பின்னர் இத்தமிழ்க்கும் பெருமானாகிய பாண்டித்துரைத் தேவனாரவர்களது பிரசங்கச் சிறப்பைப்பற்றிச் சபையின் உபாக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந்-பொ. மு. முத்தையபிள்ளையவர்கள் வியந்து பேசினார்கள்.

சபையின் நிருவாக சபையாரில் ஒருவரும் வக்கீலும் உண்மையான தமிழபிமானியும் ஆகிய ஸ்ரீமாந்-வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் தேவர்கோமானவர்களின் இரு பிரசங்கங்களையும் வியந்து வந்தனோபசாரமாக இயற்றியச்சிடுவித்துக் கொடுத்த இனிய அகவற்பாவையும், அவ்வாறே சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவான் ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயர்களியற்றிய இரு விருத்தப்பாக்களையும் சபையோர்க்குக் கொடுத்தவுடன் மதுரைத் தமிழ்ச்சங்கக் கிளையாகிய சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை உபாத்தியாயர் பிரும்மஸ்ரீ சுந்தரேசுவர ஐயரவர்கள் இன்னிசையோடு வாசித்தார்கள். சபையின் அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந்-சி. வ. நல்லபெருமாள்பிள்ளையவர்கள் தேவர்கோமானுக்கும் பிறர்க்கும் வந்தனங்கூறிப் பூவாரம்புனைந்தார்கள். தேவாராதி பாராயணந் துணைக்கருவிகளுடன் இனிது நடந்தது. கரகோஷத்துடன் சபை கலைந்தது.

இந்நகர் பெரும்பாலும் புறமதத்தர்களால் நிரம்பப்பெற்றதாகவும் இச்சபைக்கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கான பக்த சிகாமணிகள் வந்திருந்து சிறப்பித்ததை நினைக்க நினைக்க மகிழ்ச்சிகதிக்கின்றது. இச்சபையாரின் ஊக்கமும் உழைப்பும் மிகப் பாராட்டற்பாலனவே.

இங்ஙனம்

ஒரு தமிழன்.

உ

சிவமயம்.

முத்தி.

அருட்பெருங்கடவுளாணையின் அலைகடலுடைசூழவனியின்கண்ணே, அரும்பேறாகிய மானிடவாக்கை தாங்கியவருள், அனந்தபேதமாய் விரிந்த எம்மதத்தவரும் நவீனநாகரீக சங்கத்தவர்களும் அவரவர் வினைப்போகங்களிற் பன்னெடுங்காலம் மொத்துண்டிளைப்புற்ற அலுப்புத்தீர அடைதற்குரியதெனவவாவிச் சர்வசம்மதமாயங்கீகரிப்பது அது. ஆனால் பேதவுணர்ச்சியாற் பேதுற்றுத் தம்முண்மாறுபட்டு வெவ்வேறிலக்கணங்கள் கூறிப் பாவனாவடிவங்களமையப்பெற்றுப் பெரும்பிறவிப்பவ்வத்தாழ்ந்துசுழல்கின்றனர் யதார்த்தபலமில்லாத பலமதத்தவர். இறைவனருளை யெளிதினுணரப்பெறாத வித்தகையோர்களே, சித்தபரிபாகமின்றித் தங்கள் அபரஞானப் படங்களைவிரித்து வியனுலகம் வியக்கக்காட்டி அபத்தங்கூறி வீணேகதறித் தலைவீங்கி மெலிந்துவாடி விசனிக்கின்றவர்.

ஈசன், திருவருளைமுன்னிட்டுப் பாசமோசனங்கருதி யிடையறாத்தலையன்பினேறிபற்றிச் சார்வுகணீங்கிநிற்போரின் மாசிலாதமனத்தகத்தே தேனாயின்னமுதமுமாய்த் தித்திக்குந் தனது நிசவுருவோடு தேசோமயானந்தமாய் விளங்குகின்றனன். உயிர்ப்போதப்பதைப் பொருபொழுதேனும் சிறிதுமெழாவண்ணம், அகமுகத்ததாதற்கறிவிக்கு நிட்டையிற் செறிந்து, உரையிறந்து, உணவிறந்து, உளமிறந்து, உண்மையறிவானந்தவுத்தியிடைமூழ்கி, இறுமாந்திருப்பார்கள் உத்தமோத்தம பரஞானச்செல்வர்கள். ஊன்றியோசிக்குங்கால், ஊகம், அனுபவம், வசனம், மூன்றுக்குமொவ்வுமிது.

எண்ணரியநுண்ணிய நூல்பலகற்பினும், விவேகபாநு விளக்கத்தானன்றி பண்டேதொடர்ந்து பற்றிநிற்குமிதயமலினநீங்கி மெய்யுணர்தல்கூடாது. எதமின்றி யவத்தத்துவஞானவாயிலாகவே நிராசைவந்து குடிகொள்ளும். ஐயந்திரிபறவறிந்து; அதையடைந்தவர்க்குய்யுநெறி கையிலாமலகக் கனிபோலத் தோன்றலும், தொடர்ந்திடை நீங்காத்தூக்கமும், தானே தொலைந்திடும். திண்ணம். ஒப்புயர்விகந்த நிரங்கிசதிருத்தியுதயமாமெனவுரைக்கவேண்டுவதேயில்லை, ஒளிவீசலுமிருளகன்றோடன் மரபாதலால். ஓதரிய அத்துவிதசுகாதீத நிலயமுமதுவேயென ஆன்றோர் அறுதியிட்டறைவர். ஔவியப்பேய் பிடித்தாட்டலாற் சமயச்சண்டைகளோ மலிந்தன. அகங்காரம் பிறந்தது. அஞ்ஞானக்கதவந்திறந்தது. அறிவின்முதிர்ச்சி பறந்தது.

ஆனதுபற்றி மதாதிதப்பரம்பொருண்மயமாதலே மாண்பு. சாதிமதபேத சுயகடங்களனைத்தும் தற்போதத்திற் பிறந்துவளர்ந்தவையே. காரணமடங் கிற் காரணம் விளங்கும். காரணங்காணிற் கருத்தொருமிக்கும். கருத் தொருமிக்கின் முத்தியாமென்ப.

ஆதலால், நாமவுருவங்களுக்கப்பாற்பட்டு முத்திக்குவித்தாய அப்பர வஸ்துவின் உருவம், இருப்பிடமனைத்தும் சச்சிதானந்தமே. அந்தஅகண் டபரிபூரணசச்சிதானந்தப் பொருளுக்கு மதத்தர் வெவ்வேறுருவங்கள் கற் பித்துப் பற்பலநாமங்கள் கூறியழைக்கின்றனர். அவர்களுக்கும், அம்மூர்த் திகளுக்கும், உள்ளும்புறம்பும் நீக்கமற வியாபித்திருக்குமிறையாகிய அப்ப ரம்பொருள், தனது அருட்பார்வையால், தீவிரமாகவோ மந்தமாகவோ எவ் வெவர் நோக்கம், எவ்வெவ்வண்ணமோ அவ்வவ்வண்ணமே அவ்வவர்கன்மத் துக்கீடாகக் கூட்டிமுடிக்கின்றது. இதனுண்மையோராது மாறுபடுசமயி கள் தந்தம் தெய்வம், தங்களுக்கு அனுக்கிரகஞ்செய்ததென மயங்குடுன்ற னர். அந்தோ! இதுவுமறியாமையே.

பசிக்குணவுபுசித்தானொருவன் உண்டுமுடிந்தவுடனே திருத்தியடை கிறான். அத்திருத்தியவ்வன்னத்திலுள்ளதா? இல்லை. தன்னிடத்திருந் துண்டாகும் திருத்தியை அவ்வன்னத்தின்மீதாரோபிக்கின்றான். அத்திரு த்தியோ அன்னத்தினிடமாகவுள்ளதேல், சிறிதுநோங்கழித்துப் பசியுண்டா காமலாவது அல்லது விருப்பில்லாமலாவது இருக்கவேண்டும் அப்படி யாண்டுங் கண்டிலம். பரஸ்திரீ கமனம்பண்ணுமோர் விடன் சுயபத்தினி யையும்விட்டு, அப்பரநாரியினிடத்து மிகுகாதலாகி பிரமிக்கிறான். சிற்சில சமையத்து அது வெறுப்பாகத்தோற்றக்காரணமென்ன? மறுபடியும்விருப் புறுகின்றான். ஆதலால், இத்திருத்தியுந்தன்னதேயெனவோராமல் அந்நாரி பாலிருந்துவந்ததென நினைக்கிறான். அதுவும் பேதைமையே. கணந்தோ றும் விருப்பு வெறுப்புருவாய்மாறும் சந்தோஷமோ நிலையானதன்று. சித்த மிசை குடிகொண்ட அறிவானந்த தெய்வம், பாவனைக்குத் தக்கபடி க்ஷணி கமாகவோ, நித்தியமாகவோ பிரதிபலிக்கின்றது. அன்னம், ஸ்திரீமுதலிய விடங்களில், க்ஷணிகமாகத்தோற்றியவின்பமும், தனது சுய இன்பத்தின் பிரதிபலனுமென நினைத்துணரின்; அக்கணமே அவன் பரிபாகப்பட்டவனு வான். இன்பமயனீசனுகலின், அச்சுயஇன்பந்தான் பூரணநித்தியமானது.

சிற்றறிவும், சிறுதொழிலுமுடைய ஒரு மனிதன் இல்லமதின்கண் யாதேனுமோர் மங்கலவினை நிகழ்வுழி ஆண்டு வதிவோரனைவர்க்குமன்றி வந்த மற்றவர்க்கும் ஓர்வகையுவகை மேலிட்டுக்கொண்டேயிருக்குமல்லவா? அன்றியும், விசேடதுக்கங்கள், துக்ககாரணங்கள், முன்னரே அவரவர்மனங்

களிலிருந்தபோழ்தினும், இடங்காலங்களை நோக்கி, அவைகள் தாமே அகல்கின்றன. சந்தோடமே மலிந்துகிடக்கின்றன. எவ்வகைக்கவலைக்குமிடமிராது. சுபவார்த்தை, சுபபாவனைகளையன்றி வேறு காண்டலரிதே.

கணந்தோறும் மாறுபடுமியல்பினதாகிய இச்சிறுபோதமங்கலமே, அதற்குரியவன், சார்ந்த மற்றவராகிய எல்லோரையும் சின்னாழிகையோ, சின்னாளோ, இன்பமயமாக்கிவிட்டதென்றால், மாறுபடாவியற்கைத்தாய பெரும்போதமங்கலத்தைப்பற்றிப் புகலவேண்டுவதுமுளதோ? மங்கலவினைநிகழ்ச்சிக்காலத்து, அவ்வில்லத்தைக் கல்யாணவீடென்றும், வீட்டுக்காரனைக் கல்யாணக்காரனென்றும் சிறப்பித்துக்கூறுதல் வழக்கமாகலின், கிலேசநாசப்பேறென்னும் நிரதிசயானந்த நித்தியமங்கல நிலயமெனவும், நிரந்தரமங்கலமயன், மங்கலமுடையான், மங்கலம்பழப்போன் எனவும் பகரவேண்டுவதவசியத்தினுமவசியமேயன்றோ! அவைகளைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் கைலாசம், சிவம் என்னுமரியபெரிய திருநாமங்கள் தலையன்பின்வழிச்செல்லும் பரஞானக்கண்ணுடையார் விரிந்தநெஞ்சுடையார்மீது வைத்த விசேடக்கருணையினாற் கழறுகின்றனர். அந்தோ! சமரசஞானமில்லாத சமயிகள் அம்மெய்ப்போதவின்ப நாமங்களைச்கேட்டவளவிலே, அருட்போதராய்ப்பரவசமாகாது மருட்சியெய்துவாராயினும், அத்திருவருள்கூட்டிவைக்கக் காலவகையாற் கண்டறிந்தொடுங்கக்கடவர்.

கிலேசத்தைக் கீழேதள்ளி அல்லும் பகலும் உள்ளக்கிளர்ச்சி யெய்தவேண்டுமென்பதே அறிவறியாமைப் பகுதிகளிற் பொருந்திய இருதிறத்தவர்க்குமெண்ணம். அது பொதுவாயினும், களங்கமறுத்த கருத்தாலும், காதல்செறிந்த மனத்தாலும், முறையே ஒரு சாரார.்துண்மை, மற்றையோரஃதின்மையே. புலப்போதவிழ்ச்சி சூழ்ச்சிகளே காரணம். விடயவிருப்பமோ பெரும்பான்மை பண்டிதபாமரரிடத்துள்ளது. தொழிலுமப்படியே. கல்லாதவனாயினும் அருட்பிரகாசமுடைய வறிவாளியொருவனே தன்னிடத்த, இச்சை செய்கை எண்ணிறந்தன வுள்ளவேனும் உள்ளப்பதைப்பின்றி யிறப்பெதிர் வெண்ணிப் பயனோக்காது சமதரிசனம் பண்ணிக்கொண்டிருப்பன். சகலகலாவல்லவனாயினும், இறையருளெய்தப் பெறானேல், அவன் சாமானிய வுலகவியற்கைபற்றி நிகழும் மூடரின் வேறல்லன். விளங்கக்கூறின் அவரிற் கீழ்க்கடையே. மூடரினிச்சை, கன்மங்கள், பௌதிகபுவனமட்டில் சிற்சில பாகங்குறித்து நிற்கும் நாகரீகரென்றெண்ணப்படும் பண்டிதர்மனமோ பலபுவனங்களிலும் பறந்து திரிந்து சலிப்பெய்தும். நடுச்குணமே மலியப்பெற்று நடுக்குறுவர். சந்தோடத்தை எதிர்பார்த்துக குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொண்டதுமன்றி அவாவிய விடயங்களின் மேற்றோஷம் பிறக்கத்துக்கமே கதியாய்த் துன்புறுவர்.

சுத்த மனத்திடை நித்தமெழும் பரபத்திதரு மருண்முத்தியி னின்பமே தாரகமென அகண்ட சச்சிதானந்தத்தைப் பேணுதகன்று நின்றிடின், முதலிடை கடையென மூன்றுகுணம் பற்றி மாந்தர் பலதிறத்தவராவர். சாத்துவிகமாகிய முதற்குணம் ஆனந்தப்பேற்றுக்கே யிலக்கு. இடைக்குணமாகிய இராசதத் தமர்ந்தோர் ஆழிச்துரும்பே. மூன்ருவதாகிய தாமதத்துக்குத் துக்கமே யடையாளம்.

மதத்தர்கள் வகுத்த முத்திகள் நிலையுதவிலவாந் தன்மையவாகலின் மீளுதற்காரணமேயவை. உயர்வுதாழ்வுப்பாகுபாடுபெற்றிப் பதவிபேதமாய் ஸ்தானக்கிரம இன்பநுகர்ச்சிமட்டுமே குறியாயுள்ளனவெனச் சுகாதீதநாட்டிற் சும்மாவிருக்கின்றவர் சொல்வர். அறிவான் அறிவு அறிபடுபொருள் மூன்றுமின்றி மதுவுண்ட வண்டுபோலப் பேசாவனுபூதியிற் பிறங்கலே யதார்த்த முத்தி.

அதில் குணபேதத்தால் விளைந்த மனவாதகேதம், நனவாதியேதம் முதலியன இல்லவேயில்லை. அதை வீட்டிலிருந்தும், காட்டில் வசித்தும், வித்தைகள் படித்தும், வினைகளைச்செய்தும் பெறலாம். பெறுதலாவது பரபோகம்புசித்தலே ; அஃதாவது பரவஸ்துவயமாதல்தான். அப்போது ஒன்று இரண்டு என்ற விவகாரங் கிடையாது.

முத்தியே யுருவாய்த் தோன்றும் முழுமுதற்கடவுள், விரும்பும் மெய்யன்பர் விமலமனங்களைத் தன்வசப்படுத்துஞ் சக்தியுள்ளவர் பூமிக்கு ஆகருணசக்தி யிருக்கின்றதுபோல், அணுவாயும் மகத்தாயும், எல்லாமாயும் அல்லவாயும், உள்ளதாயும் இல்லதாயும் விளங்கும் அப்பரம்பொருளுக்கும் கவர்ச்சிசக்தியுள்ளது. ஆகாயத்திலெறியப் பட்டசிலையும் எற்பட்ட விசையடங்கியவுடனே தன் பிறப்பிடமாகிய பூமிக்கே திரும்பிவிடுகின்றது. வினைகளால் வேறுபட்ட சீவர்களும் மெல்ல மெல்லப் பரிபாகப்பட்டுப் பிறப்பிடமாகிய கடவுளை யடைகின்றனர். வெகுவேகமாய் எறியப்பட்ட கல் முதலியவைகளும், ஆகருஷ்ணசக்தி வியாபகத்தினுல், விசைசிறிது சிறிதாய்க் குறைந்து கீழ்நோக்கிவரும்போது மறுபடியும் விசையாக வேறோர் கருவிகொண்டு தாக்கினுல், அவைகள் பின்னும் மேலே செல்கின்றனவாயினும் கடைசியில் தாக்குவோன் கையோய்ந்தவுடனே கவர்ச்சிசக்தியி னுதீனமாகவே கீழே விழுகின்றன. அதுபோலச் சீவர்கள் பிராரத்துவம் புசித்துவரும்போதே ஆகாமியவிதை யூடேவந்து விழுந்து முளைத்து வளர்ந்து பலனுக்கு வந்தாலும், ஈசனருட் பார்வையால், காலக்கிரமத்தில் சிறிது சிறிதாகத் துண்டிக்கப்பட்டு வேருங்களைந்து விடப்படுவதினுல், யதாஸ்தானத்தில் வந்தொன்றுகின்றனர். "உள்ளங்கவர்கள்வன்" என்ற பிரபல வசனமே சான்று.

மேலும், ஒருபொருளின் வசமாகுஞ் சக்தி பலன் குறித்தே. அப்பலனும் அனுகூலங்கருதியே. அனுகூலமென்பது இன்பம் பயத்தல்பற்றி. துன்பந்தருவது யார்க்கும் பிரதிகூலமே. இன்பமும் சிற்றின்பம் பேரின்பமென இருவகையாகும். முன்னையது, இன்பமேயாயினும், உண்மை ஞானிகளொழிய மற்றவரும் இடையிடையேயன்றி நாளடைவிலும் துன்பமே எனக்காண்ப துலகவழக்கமாதலின், பின்னையதுதான் யதார்த்தம். அஃதே யவாவி யடைந்து அனுபவிக்கத்தக்கது. அதுதான் அருளிறையின் வடிவம். குணஞ்செயலனைத்தும் எவரையும் வசீகரிக்கின்ற இன்பம் பயக்கும் சுபமே தொடர்ந்திழுத்தலின், சுபசொரூபமே கடவுள். அவரின் வேருனது அசுபம். அசுபமோ அடைதற்குரியதல்லதாயழிதன்மாலையதாதலால், சுபக்கடவுளே நித்தியர், பூரணர், வியாபகர், சுத்தர்.

அதிகமான அச்சஞ் செறிந்த மனத்தவர்க்குச், சிங்கத்தின் கோரரூபம், சுபாவங்களைச் சொன்னவளவிலே மயிர்க்குச்செறிந்து சரீரம் நடுங்க வருத்தந்தோன்றுகிறது. பத்திப்பேரன்பு பழுத்த நெஞ்சினர்க்குப் பரனுருவங்களைப் பகர்ந்தவுடனே கண்ணீருங் கம்பலையுமாய் கருத்தொருமிக்க வருத்தந்தோன்றுகிறது. மேற்கூறிய இரண்டு (சிங்கம், பரன்) பதங்களே காரணமாய் நின்று அச்சமும் ஆர்வமுந்தருகின்றன. அஞ்சினேன் சிங்கங்கண்டால், ஆவிபோய் மாண்டானெனப்பான். அன்பன் மெய்ப்பரனைக்காணில், அகப்பதைப் பகன்று சுத்த இன்பமே மயமாய்த் தோன்ற லியல்பெனவுரைக்கலாகும். மருளும் தெருளும் வயங்கியவுளத்தான் முறையே துக்கமும் சுகமும் பவித்தன. கோரங்குறித்து "ஹிம்ஸா" வெனும் பதம் "ஸிம்ஹ" மென மாறியதுபோலச் சாந்தம்பற்றி "வசி"ப்பதம் "சிவ"மாக மாறிற்று. இரண்டும் வடமொழிக் காரணபதங்கள். தலை கீழாக நிலைமாறினும் பொருளொன்றே பயக்கும். முடிவாகக் கூறுமிடத்துக் கைலாசத்திற் சகோதயமாய்ப் பிரகாசிக்குஞ் சிவமே மூர்த்தி.

சொக்கலிங்கம்.

சைவசித்தாந்தம்.

(தொடர்ச்சி.)

இம்முப்பத்தாறு தத்துவங்களும், தூலதத்துவம் சூக்குமதத்துவம் அதிசூக்குமதத்துவம் என ஒரோவொன்று மூவகைப்பட்டுப் பொதுவும் பொதுச்சிறப்பும் சிறப்புமாய் நிற்கும். புவனுதாரமாகிய தத்துவங்கள், தூலதத்துவமெனப்படும். ஒவ்வொரு உயிர்கள்தோறும் இருக்கின்ற தத்துவங்கள், சூக்கும தத்துவமெனப்படும். தத்துவங்களின் அதிதேவதைகள்

அதிசூக்குமதத்துவமெனப்படும். ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் தூலமெனவும்; வித்தியாதத்துவம் எழும் சூக்குமமெனவும்; சிவதத்துவம் ஐந்தும் அதிசூக்குமமெனவும் கூறுவாருமுளர். புவனவடிவாகிய தத்துவங்கள் எல்லாருக்கும் பயன்றருதலின் பொது. தூலதேகவடிவாகிய தத்துவங்கள் தனக்குப்போக நுகர்ச்சிக்கும், சந்தனம் பூமாலைபோல மனைவிமுதலியோர் அநுபவிக்கவும்படுதலின், பொதுச்சிறப்பு. சூக்குமதேகவடிவாகிய தத்துவங்கள் தனக்குப் போகநுகர்தற்கருவியாகலின், சிறப்பு. இத்தன்மையவாய தத்துவங்களையதிட்டிக்கும் அணுபக்க சம்புபக்கத்ததி தெய்வங்களும், அவ்வத்தத்துவப் பெயர்பெறும். ஆதலால் எல்லாப்பொருள்களையும் தத்துவங்களில் வைத்துக்காண்க. காண்கவே, எல்லாப்பொருள்களும் இனிது விளங்கும். இன்னும் இதன்விரிவை திராவிடமகாபாடியத்திற்காண்க. இம்முப்பத்தாறு தத்துவங்களும் சங்காரகாலத்துத் தத்தங்காரணங்களினொடுங்கும்வழி, நிலமுதல் மூலப்பகுதியீறாகிய இருபத்துநான்கு தத்துவங்களும் சீகண்ட ருத்திரனுலொடுங்கும். மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறு தத்துவமும் அனந்ததேவராலொடுங்கும். அவற்றின்மேலுள்ள சுத்த வித்தைமுதலிய மூன்று தத்துவங்களும் இலயத்தினின்ற சிவனுல் ஒடுங்கும். ஏனைச் சத்திதத்துவம் சிவதத்துவம் இரண்டும் சுத்தசிவனுல் ஒடுங்கும். இவை புநருற்பவமாங்காலும் அவ்வவை அவ்வவராலாம். இகூருட் சுத்த சிவன் ஒருவனே நித்தியன். மற்றவர்களை நித்தியர் என்கை உபசாரம் எனக உலோகாயதம், புத்தம், மாத்திமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம் ஆகிய புறப்புறச் சமயமும், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சரா்த்திரம், ஆகிய புறச்சமயமும், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், அயிக்கவாதசைவம் ஆகிய அகப்புறச்சமயமும் என்னும் முக்கூற்றுச் சமயத்தெய்வங்களெல்லாம், பூதமுதல் அசுத்தமாயாதத்துவமீறாக ஒவ்வொரு தத்துவங்களினிலைபெறும். சிவாகமங்களுட் கூறப்படும், "ஏகன் அனேகன் இருள் கருமம் சுத்தமாயை அசுத்தமாயை," என்னும் ஆறுபொருள்களுக்கும் உண்மைத்தன்மை விளக்குகின்ற சைவமெனப்படுந் தலையாகிய, பாடாணவாதம், பேதவாதம் சிவசமவாதம், ஈசுவரவிகாரவாதம், சங்கிராந்தவாதம், சிவாத்துவிதசைவம் என்னும் அறுவகைச்சமயத்தெய்வமாய் நின்ற அதிகார போக லயசிவபேதங்கள் சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்திரசிவம் என்னும் ஐந்து தத்துவங்களுள் ஒவ்வொன்றினிலைபெறும். சித்தாந்த சைவத்தெய்வமாகிய நமது சுத்தசிவம் இம்முப்பத்தாறையுங்கடந்து நிற்கும்என்க. அவ்வத்தெய்வங்கள் நிலைபெறுந்தத்துவமே அவ்வச்சமயத்தார்க்கு முத்தித்தானம் என்க. அவ்வவற்றின் மேலுள்ள தத்துவங்கள் அவ்வச்சமயத்தார்க்கு முத்தித்தானம் என்க. அவ்வவற்றின்மேலுள்ள தத்துவங்கள் அவ்வச்

கொடிய செய்கைகளைப் பார்ப்பதினுல் அவன் அதைரியத்தை அடையாமலிருக்கும் பொருட்டு கொலைக்களத்தில் நிறைவேற்றும் கொலைகளைப்பார்க்க அனுப்பி அவ்விடத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும், நுட்பமாய்ப்பார்த்து அதைத்தன்பெற்றோர்களுக்கு விவரித்துரைக்கச் செய்வதும் தவிர, அவனுடைய மனுேதைரியத்தைப்பரிசோதிக்கும் பொருட்டு நள்ளிரவில் கொலைக்களத்துக்குச் சென்று அங்கு துண்டமாய்க் கிடந்த ஓர் சிரசின்பேரில் ஓர் அடையாளத்தைக் குறிப்பிட்டுவரவும் செய்வார்கள். இவ்விதத்திலுலேயும் இன்னும் இவைகளைப்போன்ற மற்ற வழிகளிலுலேயும் அச்சிறுவ தனக்குச் சரியான பிராயம் வருவதற்கு முன்னர் மேற்கூறிய சற்பனைகளைக் கற்றறிந்து தைரியத்திற்கும் சகித்தற்கும் உரிய காரியங்களைச்செய்து முடிப்பது, முதுமைப் பருவத்தில் இவைகளைச் செய்து முடிக்கப் பின்வாங்காமல் இருப்பதற்கு ஹேதுவாயிருக்கிறது. ஐந்திலே வளைபாதது ஐம்பதிலேவளையுமா ?

மேலும் தேகப்பயிற்சியில் மிகத் தேர்ச்சியடைந்தவனுகும் பொருட்டும், சிறந்த வில்லாளியாகும் பொருட்டும் பழக்கப்பட்டான். ஏனெனில் இப்பேதைக்குச் சில வருஷங்களுக்கு முன்னர் வில்லும் அம்பும் ஜப்பானியர்களுடைய பிரியமான ஆயுதங்களாயிருந்தன. ஜப்பான் தேசம் கீர்த்தி அடைந்ததற்கு மூலகாரணமான மல்யுத்தத்தின் இரகசியங்களையுங்கூடச் சிறுவயதிலேயே கற்று வந்தான். குதிரையேறி யுத்தஞ்செய்வதிலும் ஈட்டியினுல் யுத்தஞ்செய்வதிலும் தேர்ச்சியுள்ளவனுனுன். “எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்” என்ற ஔவையார் வாக்கியத்திற்கிணங்க அவன் பள்ளியில் எண்ணும் எழுத்துமாகிய இவ்விரண்டையுமே யன்றித் தான் சுத்தயுத்தவீரனுவதற்கு உரித்தான சகலகல்வியையும்கற்றறிந்தான்.

தன் தேசத்தின் க்ஷேமத்திற்காகப் பொருளில் வெறுப்பும், பசி, வறுமை இவைகளில் விருப்பமும் உண்டாகும்படி கற்பிக்கப்பட்டு வந்தான். உற்றவிடத்தில் உயிர் வழங்கும் தன்மையர்இச்சாமுரேய் வகுப்பினரே.

இவ்விதம் அநேக நூற்றுண்டுகளாகத் தேர்ச்சியடைந்து வந்த ஜப்பானியர்கள் உலகம் புகழும்படியான யுத்த வீரர்கள் ஆனுர்கள் என்பதைப்பற்றி ஆச்சரியப்படவேண்டுமோ! இவ்விதம் பிரசித்தி

பெற்ற சாமுரேய் வகுப்பினர் 1870-ம் ஆண்டோடு நசித்துப்போன போதிலும், இப்போதிருக்கிற கணக்கற்ற ஜப்பானிய போர் வீரர்களுள் அதே வீராவேசம இருந்து கொண்டு வருகிறது. தற்காலத்தில் ருஷியருக்கும் ஜப்பானியருக்கும் நடந்த யுத்தத்தில் ஜயப்பிரதாபம் பெற்ற அனேகமாயிரம் ஜப்பானிய யுத்த வீரர்கள் தங்கள் இளமைப்பருவத்திலேயே சாமுரேய் வகுப்பினரின் எல்லாக்கற்பனைகளையும் யுத்தப்பயிற்சிகளையும் கற்றறிந்தார்கள் என்று அறிக.

M. ராகவேந்திராச்சார்,

மனிதனும் அவன் உடல்களும்

ஸ்தூல உடல்.

பிரமஞான சங்கத்தார் என்று இப்பொழுது சாதாரணமாய்ச் சொல்லும்படியான பரவித்தியா சங்கத்தாருடைய பரிபாஷையில் **திண்சரீரம்** என்றும் **நுண்சரீரம்** அல்லது **இலிங்கசரீரம்** என்றும் வழங்கிவரும் மனிதனுடைய கீழ்க்கூறுகளிரண்டையும் **ஸ்தூல உடல்** என்பதில் அடக்கவேண்டும். அவையிரண்டும் ஸ்தூலதலமாகிய பிருதிவிதலத்தில் தொழில் செய்கின்றவை; பிருதிவிதத்துவமாகிய ஸ்தூல வஸ்துவால் ஆக்கப்பட்டவை; இப்பூவுலக வாழ்வுகாலமாகிய ஒரு ஜன்மகாலம் வரை மாத்திரம் நிற்கும்படி அமைக்கப்பட்டவை; மரணகாலத்தில் மனிதனால் நீக்கப்படுகின்றவை; அந்த மனிதன் இப்பூவுலகைவிட்டு மரணமடைந்து புவருலகையடையும்பொழுது அவையிரண்டும் ஒருமிக்க இப்பூதலத்தில் தானே நின்று குலைந்து அழிபவை; ஆதலின் அவையிரண்டும் * ஸ்தூலதேகம் என்பதில் அடங்கவேண்டியவை.

இவ்விரண்டு கீழ்க்கூறுகளையும் ஒன்று சேர்த்து நமது ஸ்தூலதேகம், ஸ்தூலஉபாதி, அல்லது ஸ்தூலவாகனமாக வகுத்துச் சொல்லற்கு இன்னும்

---

* இந்த ஸ்தூல தேகத்திற்குப் பூதியம், பூதவாரம், பூதசரீரம், பூதபரிணமதேகம், அங்கம், யாக்கை, கடம், களேபரம், காயம், பூதியம், சடம், பிண்டம், குரம்பை, ஆகம், மேனி, சடலம், மெய், என்றும் பல பெயர்களுண்டு.

ஒரு நியாயமுளது. நாம் வழக்கமாய் மகிதலம் அல்லது பூதலம் என்று சொல்லும் இப்பூவுலகமாகிய ஸ்தூல உலகத்திற்கு அப்பால் தாம் போகக் கூடாமலிருக்கும் வரை இவ்விரண்டு ஸ்தூலப் போர்வைகளில் யாதாயினும் ஒன்றையாவது அல்லது இரண்டையுமாவது நாம் கையர்ண்டு வருகின்றோம். அவையிரண்டும் பதார்த்த வகையில் பிருதிவிதலமாகிய ஸ்தூல தலத்தைச் சார்ந்தவை ஆகையால் பிருதிவிதலத்திற்கப்பால் செல்லமாட்டாதவை; அவைகளுக்குள் நின்று தொழில் நடாத்தும் சைதன்னியமான அறிவு இவ்விரு கூறுகளின் ஸ்தூல எல்லைமானங்களுக்குள் பந்தப்பட்டுக் காலதேசவர்த்தமானங்களின் சாதாரண நியமனங்களுக்கு உட்பட்டு நடக்கின்றது. இவ்விரு கூறுகளும் சொற்பம் பிரிக்கப்படத்தக்கவையாயினும் மனிதன் இப்பூவுலகத்தில் வாழுங்காலத்தில் அவை வெகு அபூர்வமாய்த் தான்பிரியும். உலகில் உயிருடன் வாழுங்காலத்தில் அவையிரண்டையும் அப்படிப் பிரித்தல் அல்லது பிரியும்படி விடுதல் உசிதமன்று; அவை அப்படிப் பிரிதல் வியாதியுள தென்பதையாவது அல்லது சரியானபடி தத்துவ நிறைக்கூட்டுறவு வாயாத தேசக்கட்டு என்பதையாவது எப்பொழுதுங் காட்டுங் குறியாம்.

இவ்விரு கூறுகளும் உண்டாவதற்கான வஸ்துக்களின் பேத நிலைகளால் தடித்த உடல் அல்லது திண்மையுடல் என்றும் நுண்பூதப் பிரதியென்றும் இருவகையாகப் பகுத்தறியக் கூடியவைகளாய் அவையிருக்கின்றன. நுண்பூதப்பிரதியானது கண்களுக்குப்பிரத்தியக்ஷமாய்த் தெரிகின்ற திண்மையடலுக்கு அணுவுக்கணு சரியான பிரதியாம். மேலும் இந்த நுண்பூதப்பிரதியானது தேகாங்க இயக்கச் சுறுசுறுப்பிற்கு ஆதாரமான பிராண வாயுக்களின் ஓட்டங்களும் ஜீவசக்தி ஓட்டங்களும் காந்த சக்தி ஓட்டங்களும் தேகத்தில் வந்து பாய்வதற்கு வழியான உபகரணமாயுமிருக்கின்றது. இதுவரை பரவித்தியா சங்கத்தார் இந்த நுண்பூதவுடலை "இலிங்கசரீரம்", என்று சொல்லி வந்தார்கள். ஆனல் பலவித நியாயங்களினல் "இலிங்க சரீரம்" என்னும் பெயரை இந்தச் சம்பந்தமான அர்த்தத்தில் உபயோகப் படுத்திவருவதை நீக்கிவிடுதல் உத்தமமெனத் தோன்றுகின்றது, "இலிங்கசரீரம்" என்னும் பதம் தொன்று தொட்டு இந்துக்களின் புத்தகங்களில் வேறு கருத்தில் உபயோகப்பட்டு வந்திருக்கின்றது. ஆதலால் இப்பொழுது எல்லோரும் சாதாரணமாய் அறிந்து அங்கீகாரஞ் செய்துவந்த அந்த வார்த்தையின் கருத்தை வலிந்து மாறுபடுத்தி வேறு ஒரு பொருளைக் குறிக்க உபயோகப்படுத்துவதனல் குணநாட்டின் சாஸ்திரங்களை வாசிக்கும் மாணுக்கருக்குள் அவர்கள் கீழ்நாட்டாராயினும் மேனுட்டாராயினுஞ் சரியே மிகுந்த குழப்பத்தை விளைவித்து விடுகின்றது. வேறு யாதொரு நியாய

மில்லாமலிருந்தாலும் இந்த ஒரு நியாயத்திற்காகவே அந்த வார்த்தையின் அக்கிரம உபயோகத்தை முற்றும் விட்டொழித்தல் நலமேயாகும். அதுவுமன்றி மனிதனுடைய தேகக்கட்டின் பலபிரிவுகளுக்கு ஆங்கிலேய மொழிகளிலேயே பெயர்கள் கொடுத்து அதனல் நமது முதற்பாட நூல்களினின்றும் ஞானநூல் கற்க ஆரம்பிக்கும் மாணுக்கர்களுக்குத் தடுமாற்றஞ் செய்யும் சமஸ்கிருதப் பதங்களை நீக்குதல் வெகு உசிதமான காரியமாம். மேலும் "நுண்பூதப்பிரதி" யென்னும்பெயர் இந்தஸ்தூலதேகத்தின் சூக்ஷ்மதமான பாகத்தினுடைய சுபாவத்தையும் சேர்மானத்தையும் வெகு திட்டமாய்க் குறித்து விளக்குவதனல் உள்ள கருத்தையே காட்டும் மொழியாயும் ஆகையால் ஒவ்வொரு பெயரும் இருக்கவேண்டிய முறைப்படியே ஞாபகத்தில் வைப்பதற்கு வெகு சுளுவான பதமாயும் இருக்கின்றது. இந்த உடல் நுண்மையான நிலையைப்பொருந்திய பூதத்தினல் ஆக்கப்பட்டிருப்பதனல் "நுண்பூத" மென்னும் பதமும் தடித்த தேகத்தின் நிழல் அல்லது சாயையே யென்னும்படி அந்தத் தடித்ததேகத்தின் சரியான பிரதியாயிருப்பதனல் "பிரதி" யென்னும் பதமும் சேர்ந்து நுண்பூதப்பிரதி யென்னப் படுகின்றது.

மேலும் பிருதிவி பூதபதார்த்தமானது எழுஉட்பிரிவுகள் கொண்டிருக்கின்றது. இவ்வுட்பிரிவுகள் ஒன்றிற்கொன்று வித்தியாசமுள்ளவை; ஒவ்வொரு உட்பிரிவம் அதற்குள்ளில் பலவிதமான கலப்புக்கள் கலந்து காட்டுகின்றன. இந்த உட்பிரிவுகளாவன:—காழ்ப்ப, இரசம் அல்லது திரவம், ஆவி, பரஆவி; கடைசியாகச் சொன்ன பரஆவி யென்பது காழ்ப்புக்கள் ஆவிகள் என்பவைகளினின்றும் திரவங்கள் எவ்வாறு வித்தியாசப் பட்டிருக்கின்றனவோ அவ்வாறே ஒன்றற்கொன்று பேதமுடைய நான்குவித நிலைகள் பொருந்தியுளது. இவைகள் தான் பிருதிவி பூதத்தின் எழு *உட்பிரிவுகள். சாதாரணமாய்ப் பொன் காழ்ப்பாகவும், சாதாரணமாய் நீர் திரவமாகவும், சாதாரணமாய் குளோரின் என்னும் இலவணக்கினி ஆவியாகவும் இருப்பது போல் சாதாரண †சீதோஷ்ண நிலையிலும் அமுக்கத்திலும் பிருதிவி பூதத்தின் யாதா மொருபாகமும் இந்நிலைகளில் யாதாமொருநிலையைத் தனது சாயமான நிலையாகக் கொண்டிருப்பினும் அஃது இந்நிலைகளில் வேறுயாதா

---

* நமது சாஸ்திரங்களில் இவ்வேழு பிரிவுகளை பிருதிவியில் அப்பு, பிருதிவியில் தேயு, பிருதிவியில் ஆகாசம், பிருதிவியில் அநுபாதகம், பிருதிவியில் ஆதி எனக்காணலாம் இதன்விரிவை "மனிதனது எழுகூறு" என்பதில் காண்க.

† இதன் அருத்தம் மேனட்டுக் கலைஞானத்தில் காண்க.

மொரு நிலையிற் புகக்கூடியது * மனிதனுடைய ஸ்தூல உடலானது இந்த ஏழு நிலைகளிலும் உள்ளபூதத்தினால் ஆக்கப்பட்டிருக்கின்றது. †தடித்த உடலானது காழ்ப்பு, திரவம், ஆவிநிலைகளில் உள்ள பூதத்தினாலும் நுண்பூதப் பிரதியானது பரஆவியின் நான்கு உட்பிரிவுகளினாலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. பரஆவியின் நான்கு உட்பிரிவுகளையும் முறையே முதலாவது, இரண்டாவது மூன்றாவது நான்காவது பரஆவி அதாவது பரஆவி I, பரஆவி II, பரஆவி III, பரஆவி IV. எனச் சொல்லுவார்கள்.

பரவித்தையின் உயர்தர உண்மைகளைச் சனங்களுக்குச் சொல்லும் பொழுது அவைகள் காரிருளில் மறைந்து கிடக்கும் பொருள்களைப்போல் தெளிவின்றி மனத்திற்கெட்டாதபடி அதிகமங்கலாயும் புதைபொருளாயும் இருக்கின்றன வென்று ஒய்வின்றி முறையிட்டு "நாங்கள் எங்கே ஆரம்பிக்க வேண்டியது? நாங்களே சொந்தமாய்க் கற்று நீங்கள் கூறும் விஷயங்களின் உண்மையை ஆராய்ந்து அறியவேண்டின் நாங்கள் எவ்வாறு தொடங்கவேண்டும்? நாங்கள் அனுசரிக்கவேண்டிய முதல் படிகள் யாவை? பரவித்தியா சங்கத்தார் சரசமான இவ்வளவு வெகு சுலபமாய்ப் பேசும் இந்தப் பாஷையின் முதலெழுத்துத் தான் உண்மையில் யாது? நாங்கள் அறிந்துளோம் என்று சொல்லும் ஏற்றவர்களின் வார்த்தையைக் கேட்டு வெறும் நம்பிக்கையின் பேரில் தானே இவ்விஷயங்களை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாய் நேரில் இவ்விஷயங்களை யறிந்து அவைகள் உண்மைதானென்று காணும் பொருட்டு லௌகீகத்தில் உழன்று கிடக்கும் ஆண் பெண் என்னும் இருதிறத்தினராகிய தாங்கள் செய்யவேண்டியது யாது?" என்று பலவாறு வினவி நிற்க நாம் காண்கிறோம். இப்பொழுது இவ்விஷயத்தில் உண்மையில் நாட்டங்கொண்டிருப்போர் தாங்கள் முதலில் அனுசரித்துப்பழகவேண்டிய படிகளைத் தெரிந்துகொள்ளும்படியாகப் பின்வரும் பக்கங்களில் மேற்கண்ட கேள்விகளுக்கு விடைதரப் போகின்றேன். ஆனால் இந்தப்படிகள் நமது வாழ்க்கையில் தரும நடை, அந்தக்கரணம் பரநாட்ட விஷயம் இவைகளுக்குரித்தாகிய பாகங்களையுங்கூடச் சரியான பழக்கத்தில் வைத்துவரும் வாழ்வுக்கே உரியவையென்பது எப்பொழுதும் அறிந்திருக்கவேண்டும். ஸ்தூல தேகத்திற்கு மாத்திரம் மனிதன் செய்யக்கூடிய யாதொன்றும் அவனைப் பரதரிசியாகவாவது புனித மூர்த்தியாகவாவது செய்து போடாது; ஆனால் இந்தச்

* உதாரணமாக:—நீர் சாதாரண காலத்தில் திரவ ரூபமாயினும் ஒவ்வொரு காரணத்தினால் காழ்ப்பு ரூபமாகிய பனிக் கட்டியாகவும் ஆவிரூபமாகி நீராவியாகவும் மாறக்கூடியது.

† தடித்தஉடல்-அன்னமயகோசம்; நுண்பூதபிரதி-பிராணமயகோசம்.

சரீரமானது நாம் உபயோகிக்கவேண்டிய கருவியாயிருக்கிறபடியால் மேய் ஞ்ஞானடாதையை நோக்கி நாம் காலெடுத்து வைத்துச்செல்லுவதற்கு இந்த தேகத்தையும் ஒருவிதப் பழக்கத்திற்குக் கொண்டுவரல் அவசியமாம். தேகத்தைமாத்திரம்பழக்கி வேலைசெய்தால் நம்மைமேல்நோக்கிச்செல்லும் உன்னத நிலைகளுக்கு ஒருபோதும் கொண்டுபோகமாட்டாது ஆயினும்தேகத்தைக் கவனியாமல் அதை முற்றும் சும்மாவிட்டுவிடல் அந்தஉன்னத நிலைகளுக்கு ஏறிச் செல்வதையே நமக்குச் சுத்தமாய் அசாத்தியமான காரியமாய்ச்செய்து போடும். மனிதன்குடியிருந்து தொழில் செய்யவேண்டிய தேகங்களானவை அவனுடைய கருவிகளானதால் நாம்முதல் முதல் அனுபவசித்தமாய் அறிய வேண்டிய தொன்றுண்டு. அஃதாவது நமக்காகத் தேகமிருக்கின்றதே யல்லாமல் தேகத்திற்காக நாம் இருக்கின்றோமல்லோம். நாம் ஆண்டு உபயோகிப்பதற்தாகவே தேகம் நம்முடையதாயிருக்கின்றது. தேகமானது நம்மை ஆண்டு உபயோகப்படுத்தும்படியாக நாம் அதற்குச் சொந்தமல்லோமென்பதேயாம். இந்தச்சரீரமானதுபுடமிட்டதங்கம்போலாகும்படி சுத்தித்துப் புனிதமாக்கவேண்டிய ஒரு கருவி, திருத்தி நயப்படுத்த வேண்டிய கருவி, சீரடையப் பழக்கவேண்டிய கருவி; மனிதனுடைய அதி உன்னத காரியங்களுக்கு இந்தப் பிருதிவிதலத்தில் கருவியாயிருப்பதற்கு மிகவுந் தகுதி பெற்றிருப்பதற்கு வேண்டிய அப்படிப்பட்ட உருவம் வாய்ந்து நிற்கும்படியும் செய்ய வேண்டிய கருவி. இந்த இலக்கைச் சார்ந்து நடக்கும் ஒவ்வொரு சாதகத்தையும் பலப்படுத்தித் தேற்றி விருத்தி செய்தல் வேண்டும்; இந்த இலக்குக்கு விரோதமாய்ப் போகும் ஒவ்வொரு சாதகத்தையும் ஒழித்தல்வேண்டும். இந்தச்சரீரம் எவ்விதமான விருப்பங்களைக் கொண்டிருந்தாலுஞ்சரி, போன நாட்களில் எவ்விதமான பழக்கங்களைப் பழகிக்கொண்டு வந்தாலுஞ் சரியே அதனல் நமக்கொன்றுமில்லை, இந்தச்சரீரமானது நம்முடையது இஷ்டப்பிரகாரம் அதை நாம் உபயோகிக்கலாம், வேலைகொள்ளலாம்; மனிதன் அதை ஏவி நடத்துவதற்குப் பதிலாக அது தன் கையில் கடிவாளவாரையெடுத்துப்பிடித்துக்கொண்டு மனிதனை அடக்கி ஆண்டு நடத்த உரிமை வகிக்கின்றதோ அந்த நிமிஷமே வாழ்வின் முழுப்பயனும் தலை தடுமாறிப் போகின்றது. எவ்விதமான் மேற்போக்கும் அசாத்தியமாய் விடுகின்றது. ஞானேச்சையுள்ள புருஷன் யாவனாயினும் ஆரம்பிக்கவேண்டிய இடம் இது தான். ஸ்தூல தேகத்தின் சுபாவ குணமே அதைக் கொஞ்சம் சுளுவிலேயே ஒரு ஊழியக்காரன் அல்லது சருவியாகச் செய்துகொள்ளும்படியாகச செய்கினறது. அதற்குச் சில விசேஷ குணங்களுண்டு. இக்குணங்களே அதைப் பயிற்றுவதற்கு அனுகூலமாயிருக்கின்றன; அவைகளே அதை ஆண்டு நடத்தி உருப்படுத்தலைச் சற்றுச் சுலபமாக்குகின்றன. இந்தவிசேஷகுணங்களில் ஒன்று என்னவெனில் அதைக் குறித்த ஒருவழியில் வேலை செ

ய்ய ஒரு தரம் பழக்கி விட்டால் அப்பால் அது யாதொரு பிரயத்தனமு மின்றித் தானகவே அதே வழியில் வெகு இலகுவாய்த் தொழில் செய்து கொண்டே போகும். மேலும் முன்வேறு வழியில் நடந்துகொண்டிருந்த போது அஃது எவ்வளவு சுகங்கண்டதோ அவ்வளவு சுகத்தையே இப்பொழுது இந்த வழியிலும் காணும். ஒரு கெட்ட வழக்கத்தைச் சரீரமானது கொண்டிருந்தால் அந்த வழக்கத்தை எவ்விதமாயினும் மாற்ற மிகுந்த தடை செய்யும். ஆனல் அந்தக்கெட்டவழக்கத்தைமாற்றும்படி அதைப் பலவந்தப்படுத்தினல், மாற்றுவதற்கு அது குறுக்கே கொண்டுவந்து போடும் தடைகளை யெல்லாம் ஜயித்தால், மனிதனுடைய இச்சைப்படி நடக்கும்படி அதைக் கட்டாயப்படுத்தினல் அப்பொழுது சிறிதுகாலத்திற்கப்பால் இந்தச் சரீரமானது மனிதனது பிரயத்தனமின்றித் தானே சுயேச்சையாய் இப்பொழுது மனிதன் அதற்கு ஏற்படுத்திய புது வழக்கத்தை அனுசரித்துக் கொண்டு, முன் மனிதன் நீக்கவேண்டியது நியாயமென்று கண்டு ஆக்ஷேபித்த பழையவழக்கத்தை எவ்வளவுதிருப்தியுடன் அனுசரித்து நடத்திக் கொண்டு வந்ததோ அவ்வளவு திருப்தியுடனே இந்த நூதன வழக்கத்தையும் அனுசரித்து நடத்திக்கொண்டு செல்லும்.

இப்பொழுது தடித்த வுடல் என்னும் திண்பூதவுடலின் சொரூபத்தை விசாரிக்கப் புகுவாம். இந்த உடலை இதிற் சேர்ந்திருக்கும் தேயுவின் அம்சமான தாதுக்கள் பயிற்சியில்லாத ஊனக் கண்களுக்குத் தெரியாதவையாயினும் மொத்தமாய் ஸ்தூல உடலின் திருசியபாகம் என்று சொல்லலாம். இந்த உடல் மனிதனுடைய போர்வைகளிலெல்லாம் அதிக வெளியான போர்வை. இது அவனுடைய எல்லாவற்றிற்கும் தாழ்ந்த தோற்றம், எல்லாவற்றையும் பார்க்க அதிகமாய் அவனைக் கட்டுப்படுத்தி அவனுடைய சொரூபத்தை மிகக்குறைத்துக்காட்டும் அவனது தோற்றம்.

(இன்னும் வரும்)

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

மனிதனது எழுகூறு.

உயர்தரமனஸானது பிரஞ்ஞையுடன் கர்த்தாவாயிருந்துதொழில் செய்யப்பெற்ற புண்ணிய புருஷர்களால் வெளித்தோற்றமாய்க் காட்டப்படும் உயர்தரமனவின் வேறொரு சக்தியென்னவென்றால் இச்சாமாத்திரத்தில் உருவங்களைச் சிருஷ்டிசெய்யும் சக்தியாம். இந்தச்சக்திக்கு கிரியாசக்தி என்றுபெயர். ஹேலேனாம்பாள் தான்செய்த இரகசியசித்தாந்தம் என்னும் நூலில் இச்சக்தியைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனள். 'கிரியாசக்தி — அறிவுக்குள்தானே இயல்பாய் நிறைந்துள்ள உரத்தின்வன்மையால் புறம்பாகக்கண்களுக்குத்திரிசியமாகும்படி வெளித்தோற்றங்களைச் சிருஷ்டிசெய்து விடும்படி அறிவுக்கு வலியுறுத்தும். அந்த வெகு இரகசியமான எண்ணத்தின் சக்தி மனத்திலிருக்கும் எந்த எண்ணமாயினும் சரி ஒருவனுடைய ஞாபகமானது அந்த எண்ணத்தின்பேரில் பலமாய் ஆழ்ந்து ஒரே சிந்தனையாய் நின்றால் அந்த எண்ணமானது வெளித்தோற்றமாய் உருபிகரித்துவிடும் என்று முன்னோர்கள் கொண்டிருந்தார்கள். இது போலவே இருக்கமான சிந்தனையானது விரும்பியகாரியங்களைச்சித்திக்கச்செய்துவிடும்." உண்மையான சித்திகளின் இரகசியம் எல்லாம் இஃதே.

மேலும் உண்மையான நான் என்னும் உயர்தரமனஸானது பலஜன்மங்களின் பழக்கங்களினாலும் அனுபவங்களினாலும் "நான்" என்னும் தன்னறிவைப்பூரணமாய் அடைந்திருக்கும்பொழுது அது சர்வாந்தரியாமியாகிய ஈசுவரனுடைய மனவின் சாரத்தின் பாகமாயிருக்குந்தன்மையில் அதன் சொந்தத்தலத்தில் ஒருவரையறையுமின்றிச்சர்வஞ்ஞத்துவம் பொருந்தியுளது என்றும் பூதபௌதிகவர்த்தமானங்களின் அறிவுமுழுமையும் தங்கியிருக்கும் பொக்கிஷம் என்றும் ஹேலேனாம்பாளிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த நித்தியவஸ்துவாகிய உயர்தரமனஸ் தனது கிரணமாகிய கீழ்த்தரமனவின் மூலமாய் மனிதனுடைய மூளையைத்தாக்கக்கூடும்பொழுது அந்த மனிதன் அற்புதமான குணங்கள்காட்டும் ஒருவனாகின்றான். அஃதாவது அவன் அற்புத மேதாவி அல்லது பரதரிசி என்பவனும்.

(இன்னும் வரும்)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

வைத்தியம்.

மனோல்லாசச்சூரணம்.

ஏலம், இலவங்கப்பட்டை, மலாக்காசந்தனக்கட்டை, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், அல்லி, நெய்தற்கிழங்கு, சீரகம், நீர்வள்ளிக்கிழங்கு, கொன்றைக்கிழங்கு, திப்பிலிமூலம், பூவரசின் விரை, புரசின் விரை, இச்சி விரை, ஆலம் விரை, அத்தி விரை, நத்தச்சூரிவிரை, மாம்பருப்பு, சிந்திற்கொடி, ஆவிரை விரை, நீர்முள்ளி விரை, சதகுப்பை, அமுக்கரா வேர், செங்கழுநீர்க்கிழங்கு, மரமஞ்சள், இவை வகைக்குப்பலம் 1 கிராம்பு, சடாமாஞ்சில், அதிமதுரம், கோரோசனை, சலாசத்து கல்நார், கூகைநீறு, தக்கோலம், சிறுநாவற்பூ, குங்குமப்பூ, கோஷ்டம், சாதிக்காய், சாதிப்பத்திரி, இவை வகைக்கு வாரகனெடை 5 பச்சைக்கருப்பூரம் வாரகனெடை 3 எல்லாவற்றையும் ஒன்ருக்கிச் சூரணித்து நயமான துணியில் வடிகட்டிப் பத்திரப்படுத்திக்கொண்டு உபயோகிக்கும்போது சீனிச்சர்க்கரை பலம் 8 கலந்து உபயோகிக்கவும்.

உபயோகம்:—காலை மத்தியானம் மாலை ஆகிய 3 வேளைகளிலும் முறையே பசுப்பால் நீர்வள்ளிச்சாறு கழுநீர் இவற்றை அநுப்பானமாகக்கொண்டு, வெறுகடியளவு சூரணத்தை அவ்வப்போது இட்டுச் சாப்பிட்டுவரவேண்டியது.

பத்தியம்:—அதிககாரம் புளி கிரந்தி வஸ்துக்களை நீக்கிச் சுகுணபோசனங்கொள்ளல் வேண்டும். வெள்ளாட்டுப்பால் பசுப்பால் இஷ்டமான அளவு கூட்டிக்கொள்ளலாம்.

தீரும் வியாதிகள்:—மூத்திரக்கிரிச்சரம் மூத்திரப் பிரளயம் இரத்தப்பிரமியம் உள்வெக்கை எரிவு நீர்க்கடுப்பு தாதுநஷ்டம் யோனித்தோஷம் லிங்கத்தோஷம் இந்திரியக்கெடுதி காமப்பைத்தியவெட்டை (இஃது அதிககாமங்கொண்டோர் அதனைப்போக்கிக்கொள்ளும் வகையறியாது தியங்கி நிற்குஞ் சமயத்திலுண்டாகுஞ் சித்தப்பிரமையோடு கூடிய போலிப் பிரமேகம்) மேகச்சுரம் தாகம் மூர்ச்சை வேதனை ஆகிய எண்ணில்லாத மேகச் சம்பந்தமான நோய்களும் குணமாய்விடும்.

நெல்லிக்காய் லேகியம்.

நெல்லிக்காய்ச் சாறுபடி 1 நல்லெண்ணெய் படி $\frac{1}{8}$ (அரைக்கால்) சீனி சர்க்கரை பலம் 6 இம்மூன்றையும் ஒன்ருக்கிப் பாகுபோற் காய்ச்சி இதில்

சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், கொத்துமல்லி, ஓமம், வாய் விளங்கம், வெப்பாலையரிசி, சிறுநாவற்பூ, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, இவை வகைக்கு வராகனெடை 3 கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றின் தோல், தனித்தனி வராகனெடை 7 இவற்றை வெயிலுலர்த்தா யுலர்த்தி யிடித்த சூரணத்தை தூவிக் கிளறிவைத்துக்கொள்ளவேண்டியது.

உட்கோள்ளும் விதம்:—வேளைக்குச் சிறிய புன்னைக்காயளவாகக் காலைமாலை 10, 15 நாள்வரை சாப்பிடலாம்.

தீரும் வியாதிகள்:—பைத்தியம், அரோசகம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம், அக்கினிமந்தம், சத்தி விக்கல், இளைப்பு, தொண்டைப் புகைச்சல், உஷ்டணம், வாயு, மூலவாயு, முதலான ரோகங்கள் குணமாகும்.

இந்த லேகியத்தை நெய் தேன் 2ம் இன்றி எப்படி முடிப்பதென யோசிக்கவேண்டாம். முதலிலேயே நல்லெண்ணெய் கூட்டிப் பாகு செய்யப்படுவதால் அதுவே போதுமான பதமாய் லேகியத்தை கெடாமற் காக்கும்.

வயிற்றுக்கடுப்பிற்கு.

ஒரு எலுமிச்சம்பழத்தை மேற்பாகத்தில் மாத்திரம் வில்லையாகச் சிறிது நறுக்கி ஒரு குன்றியளவு அபினியைப்பழத்தின் மத்தியில் பொருந்த அமுக்கி முன் நறுக்கிய வில்லையைக்கொண்டே மூடி அறுபட்ட பாகம் மேலாக இருக்கும்படி எதாவது ஓர் இடுக்கியால் பிடித்துக்கொண்டு தணலில் வேகவைத்து எடுத்து ஆற்றிப் பிழிந்து சாப்பிடவேண்டும். முழுமையும் ஒருவேளைக்கு ஏற்ற அளவு. பழத்தை வேகச்செய்யும்போது ரசம் பொங்கி வழிந்து விடாமல் அடிக்கடி எடுத்தெடுத்து ஆற்றியாற்றி வேகவைத்துக்கொள்க. பக்குவமாய்ப் பழம் வெந்தால் தான் அபினியில் பழம் ரசங்கலந்து லாகிரியுமில்லாமல் விரைவிற் சுகுணத்தைக் கொடுக்கும்.

1, 2 வேளையிலேயே எப்படிப்பட்ட கடுப்புங் குணமாய்விடும். இது முக்கியமாய் உஷ்டண தேகிகளுக்கு அபானத்தில் அடிக்கடி குத்தி ஒருவிதமான எரிவையும் மயக்கத்தையு முண்டாக்கி இரத்தமுஞ் சீதமுங் கலந்து போகும் போக்கிற்குச் சஞ்சீவி யென்னலாம். இம்மருந்தைச் சாப்பிட்ட ஒருமணி நேரத்திற்குள் அடிவயிற்றுவலி நின்று விடும். குறைந்த அளவிற் குழந்தைகட்கு மட்டும் உபயோகிக்கலாம். ஒரு வருஷத்திற்குட்பட்ட பாலர்கட்கு கொடுக்கக்கூடாது.

பத்தியம்:—காரவஸ்துக்களையும் வாயுபதார்த்தங்களையும் பாலையும் நீக்கிப்புசிக்க.

கண்ணொளி அதிகரிக்க.

நோயில்லாததும் நன்றாய் முதிர்ந்ததும் கனமுள்ளதும் 6 வரைகளுள் ளதுமான கடுக்காயை ஆராய்ந்தெடுத்துக் கொஞ்சநேரம் முலைப்பாலிலூறப் போட்டெடுத்து அழுக்கில்லாமற் கழுவி யுலர்த்திவைத்துக்கொண்டு காலை மாலை கொஞ்சம் முலைப்பாலிலுறைத்துக் கண்ணிற் றீட்டி வருக. உறை த்த கடுக்காயை உடனே சுத்தமான துணியால் நன்றாய்த் துடைத்து உத ரும்படி தூசிவிழாத வெளியிடத்தில் வைத்துக்கொள்ளவும்.

இது வயது சென்றவர்களுக்குக் காணும் வெள்ளெழுத்து படலம் முத லியவற்றை நீக்குகிறது. சிறுகச்சிறுக ஒளியை அதிகப்படுத்திக் கண்க ளைச் சுத்தப்படுத்துகிறது. சதாநீர் வடிந்து பார்வையை மட்டுப்படுத்தும் உபாதியை ஒரு வாரத்தில் நீக்கிவிடுகிறது. காலையில் நித்திரை விட்டெழு ந்தவுடனும் இரவில் நித்திரைக்குப்போகும்போதுந் தீட்டிவருக.

கவனிப்பு:— கண்களுக்கிடும் மருந்துகளையும் உறைக்குங் கல்லையும் பால்கொள்ளும் பாத்திரத்தையும் இடும் கைவிரல்களையும் எப்போதுங் கவ னித்து சுசியாய் வைத்துக்கொள்வதில் அதிக கவனஞ் செலுத்தவேண்டும்.

வீ, சா. ஐயன் பிள்ளை,
இந்து வைத்தியர், பல்லடம்.

The Measurement of the Soul & bowel.

உடலளவும் குடலளவும்.

கடல்சூழ்ந்த வையகத்தின்கண் காணப்பட்ட மானிடர்கள் ஒவ்வொரு வரும் அவ்வவர் கரத்தால் எண்சாணுயரம் உடையாரென்பதைப் பற்பலரறி ந்திருக்கக்கூடும். ஆனால் சிற்சில ரறியார் என்பது தேற்றம். உடலுயரங் க ண்டறிந்தவருள்ளும் பருமனறியார் பலராவர். அங்ஙனம் உயரமும் பரும னும் ஒருங்கே அறிந்தார் சிலராவர். ஈண்டு உடற்பருமன் எவ்வளவோவெ னின் தத்தங்கரத்தால் நாற்சாணேயாம். இனி, குடலளவு கூறப்புகின், உ டலளவான்வந்த உயரச்சாண் எட்டுக்கும் பருமச்சாண் நாலுக்குமாகப்பெரு க்கின்,வந்த முப்பானிரண்டு சாணேயாம். இம்முப்பானிரண்டும் அவ்வவர் கரச்சாணளவே. இவ்வாறு ஏற்பட்ட குடலளவை அநேகமாய் எத்தகைய ஆங் கில வைத்திய நிபுணர்களு மறிந்திராரென்றால், மற்றியாரே யறிதற்கருகர்.

இக்குடலளவு எவ்வாற்றாற் கண்டுபிடிக்கப்பட்டதெனின்: (இன்னும் வெளிவராத) வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகநூலாகிய 'மஞ்ஞேபோதை' யுள் ௩௰௨-வது செய்யுளாகிய "முப்பானிரண்டு முழக்குடல்" என்று காணப்பட்டமையினானும், கண்டவாறே ஓர்பிரேதத்தை நேர்நின்று பரிசோதித்தமையினானும், பிறவாற்றானுமாம். இனி குடலளவெவ்வளவோ வவ்வளவே வுண்டியளவுங் கொள்ளத்தகுமெனத் தெள்ளிதில் விளக்கப்படும். என்னை யெனில் முப்பத்திரண்டு முழக்குடல் வயிற்றினுள் அமையப் பட்டிருத்தலினால், ஆகாரமும் முப்பத்திரண்டுபிடிகொளர்பாற்றாம். அங்ஙனங்கொண்ட ஆகாரமுஞ் சாதம், கரி, நீர் ஆயமூன்றும் உட்படவேயாம். பிடியளவுந் தத்தங்காத்தினளவாம். இங்ஙனம் எவனொருவன் தன்காத்தால் முப்பத்திரண்டுபிடி ஆகாரம் உட்கொள்ளுவானோ அவன்ஒருகாலத்தும் பிணிக்கிலக்காகானென்பதுண்மை. இனி அமுதங்கிடைத்தாலும் முப்பத்திரண்டுபிடிக்குமேல் அணுவளவும் புசிக்கலாகாதென்பது பெறற்பாற்று. "தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணில் நோயளவன்றிப் படும்" என்ற குறளில் தெரியான் என்பதற்குப் பரிமேலழகருரையை சிந்திக்கக்குடலளவைத்தெற்றென விளக்கும். இதனால் உடலளவு எண்சாணுயரமும், நாற்சாண்பருமனுள்ளதென்றும், குடலளவுமுப்பானிரண்சோண் என்றும். இக்காரணத்தால் ஆகாரம் முப்பானிரண்டுபிடி கொள்ளல் வேண்டுமென்றும் விளக்கியபடியாம்.

சதுரை . அ . சிவசிதம்பரப்பிள்ளை

இந்தியரின் வியாபாரத்தொழில்.

தற்காலம் இந்தியர் தங்கள் கவனத்தை பெரும்பான்மையும் இராஜாங்க விஷயத்தில் செலுத்தியிருக்கிறார்களே யல்லது சுதேச வியாபாரம் விர்த்தியடைய வேண்டிய ஏற்பாடு செய்வார்களில்லை. விவசாயம், வியாபார முதலிய தொழில்களை எவ்விதமாய் அபிவிருத்தி செய்வதென்றும், அதினாலடையும் பலன் சுதேசிகளுக்கு அளவற்றதென்றும் சில தேசாபிமானிகள் ஏற்கனவே, இந்தியாவில் ஒவ்வொரு மாகாணத்திற் கூடிவரும் காங்கிரஸ் மஹாசபையில், ஓலமிட்டிருந்தும், ஷை தீர்மானங்களை ஊர்ஜிதப்படுத்தி கைவல்யத்திற்கு கொண்டுவருவது அசாத்தியமாயிருக்கிறது. இத்தீர்மானங்கள் அ

நுகூலத்திற்கு வராத காரணந்தான் யென்ன ? முதலாவது, திரவியமின்மையும், ஊக்கமின்மையுமென்று ஏற்படுகிறது. வர்த்தகவிஷயத்தில் மேனாட்டார் சிறந்தவர்களாய் விளங்குவதற்கு முதற்காரணம் வியாபாரக்கல்வியே. இந்தியர்களோ யித்தரக்கல்வியையின்னும் அசட்டை செய்திருக்கிறார்கள். அந்நிய நாட்டாரைக் கவனித்தால், அவர்கள் கலாசாலையில் விவசாயம், வியாபாரத்திற்கு வேண்டிய நூற்களை ஏற்படுத்தி தகுந்த ஆசிரியர்களைக்கொண்டு சிறுவர்கட்கு போதிக்கிறதுமல்லாமல், அக்கல்வியை முன்னிட்டு பிரசுரமாகும் பத்திரிகை வாயிலாயும் மேற்படி வித்தைகளின் பலனை அடிக்கடி தெரிவித்திருக்கிறார்கள். இவ்வித பாடசாலைகளில் அந்நிய பாஷையில் தேர்ச்சியடைந்த ஐரோப்பிய மாணாக்கர்கள் பிறதேசஞ்சென்று வியாபார லாபத்தை யடைவது கஷ்டமாகுமோ! திருஷ்டாந்தத்திற்கு பிரெஞ்சு, ஜெர்மனி, அமெரிக்கரும் நமது ஆங்கிலேயரைப்போலவே அந்நிய பாஷையைக் கற்று புறதேசங்களுக்குப்போய் ஊர் குடிகளுக்கு வேண்டிய சரக்குகளை இறக்குமதி செய்து, அத்தேயத்தில் விளையும் தானியம் உலோக வர்க்கங்களை யாவையும் சேகரித்து சுதேயங்களுக்கு ஏற்றுமதி செய்வதை யின்னும் பார்த்துவருகின்றோம்.

இப்படிச் செய்வதினால், அவர்களும், அவர்கள் சுதேசமும் நாளடைவாக ஐசுவரியத்தில் செழிப்படைந்து, இதர தேசத்தாரால் சன்மானிக்கப்படுகிறார்கள். ஆகவே எத்தேசத்தாரும் ஐசுவரியத்தை யடையவேண்டுமாயின், முதலாவது பிறதேசங்களுக்குப் பிரயாணமாகி அந்நிய பாஷையைக் கற்று வியாபாரத்தொழிலில் மனதைச் செலுத்தவேண்டுவது அவசியம். இந்தியர்களாகிய நாம் ஆங்கிலேய பாஷையைத்தவிர இதர மேனாட்டு பாஷைகளைக் கற்றுக்கொள்ள எத்தனிப்பதே கிடையாது. தற்காலம், இராஜரீக விஷயங்களில் கீர்த்திப்பிரதாபம் பெற்று விளங்கும் ஜப்பானியர் இவ்வளவு மேற்பதவியை யடைந்ததற்கு காரணம் அந்நிய பாஷையைக் கற்றதினாலன்றோ ? அந்நிய பாஷையை தெளிவாய்க் கற்றுக்கொண்டாலல்லது நமது சரக்குகளை ஏனையோ ரெளிதாய் வாங்கவும், அவர்களிடமிருந்து பிரயோஜனமான பொருட்களை நாம் பெற்றுக்கொள்ளவும் சாத்தியப்படாது. ஆங்கிலேயர் மேற்சொன்ன கல்வியை பூண்டிருப்பதினாலே, ஜெர்மனி கைத்தொழிற் சாலைகளில் செய்யப்

பட்டுள்ள வெள்ளி, பித்தளை முதலான சாமான்களை சரசமாய் வாங்கவும், ஜெர்மனிக்கு இங்கிலாந்திற் செய்யும் இரும்பு வர்க்கங்களை ஏராளமாயனுப்பவும், இன்னும் பிராஞ்சு, அமெரிக்கா, உருஷியா ஜப்பான், சைனு முதலிய இடங்களிற் சென்று வர்த்தகத்தை விர்த்தி செய்யவும் அநுகூலமாகிறது. புறதேசங்களிலிருந்து நம் பரதகண்டத்திற்கு வரும் ஒவ்வொருவரும் முதலாவதாக வியாபாரத்திற்கு வேண்டிய பாஷையைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். இந்தியர்கள் இங்கிலீஷ் பாஷையில் சகல சாத்திரங்கள் யெழுதவும், உபந்யாசிக்கவும் பாண்டியத்யமடைந்திருந்தும் வியாபாரத்திற்குவேண்டிய இதர பாஷைகளை செவ்வனே கற்றூர்களில்லை. இதுவே வியாபார சீர்கேட்டிற்கு முதற்காரணம். தற்காலம் பர்மாவில் தனவந்தர்களாயிருக்கும் செட்டிப்பிள்ளைகள் தங்கள் திரவியத்தைக்கொண்டு, நெல், பருத்தி, மரம் முதலியவைகளை ஏராளமாய் சேகரித்து இங்கிலீஷ் கம்பெனிகளைப்போல் வர்த்தகஞ் செய்யப்படாதா, இன்னும் பூர்விகத்திலிருந்தாற்போல் வந்ததைப் பெற்றுக்கொண்டு தன் வரையும் திருப்தி யடைந்திருந்தால் சுதேசியம் க்ஷேமப்படுகிற வழியில்லையே. நாம் சற்று உறக்கத்தினின்று தெளிந்திருக்கும்பட்சத்தில், கவர்மெண்டார் நமக்கு வேண்டிய உதவிகளைப்புரிவார்கள். கவர்மெண்டார் உதவியின்றி யூதர், பார்சி, முதலியஜாதியார் இதரதேசங்களில் தங்கள் வர்க்கத்தை விர்த்திசெய்து ஐசுவரியத்தை அடைந்திருக்க, நாம் மட்டும் அசட்டை செய்திருப்பது நமது பெருங்குற்றமே. ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் இந்தியாவில் விளையுந் தானியங்களின் வகைகளையும், மரஞ்செடி முதலிய வர்க்கங்களையும், பூமியின்கீழ் அமைந்துள்ள உலோக வர்க்கங்களின் லட்சணத்தையும், தெரிந்துகொண்டிருந்ததால், வந்தபின் அவர்களுக்கு அநுபவமாயுண்டாகும் ஆராய்ச்சி அனந்தமென்று சொல்லாமலே அமையும். தரையினடியிற் புதைந்துக் கிடக்கும் இருப்புத் தகடுகளை யெடுத்து மரக்கலங்கள் செய்யவும், சமுத்திரத்தின் கீழ் அசைவாடியிருக்கும் ஓர் வகைச் செடியினின்று முத்துக்களை யெடுத்து விலையுயர்ந்த ஆபரணதிகளைச் செய்யவும், ஆகாயவிரிவில் பரவியிருக்கும் மின்சாரத்தை தங்கள் வசமாக்கி அநேக கருவி யந்திரங்களிலடக்கி வியாபாரஞ் செய்வதையும் கவனிக்கின், அவர்களது நுட்பவிவேகத்தைக்

காண்பிக்கிறதல்லவா! அறிவிருந்தும், விவேக மில்லையாயின் பிரயோஜனமென்ன? இந்தியர்களில் தனவந்தர் அநேகரிருந்தும், தேசாபிமானத்தை முன்னிட்டுப் பொதுநலத்தை நாடினவர்கள் சிலர்தான். ஜமீந்தாரர்களெல்லாம் ஏகோபித்து வியாபார கலாசாலையொன்றேற்படுத்தி,. இந்திய பாலர்களைத் தேற்றினல் இந்தியா திரவியத்திலும், க்ஷேமத்திலும், ஒருகாலும் க்ஷீணதசை யடையாதே. தோலைப் பதனிடவும், காப்பி, தேயிலை, கரும்புத் தோட்டங்களை செழிக்கச் செய்யவும் பொன் சுரங்கங்களைக் கண்டடைந்து விர்த்தி செய்யவும், தங்களுக்கு வேண்டிய ஆடைகளை யந்திரங்களின் மூலயமாய்ப் பருத்தியைக்கொண்டு செய்து கொள்ளவும் கற்பிக்கும் மேனுட்டுக் சாஸ்திரங்களை ஊகித்து அறிந்தாலல்லவா க்ஷேமலாபத்தை எதிர் பார்க்கக்கூடும். சாதாரணமான நெருப்புப்பெட்டியும் விளக்கு எண்ணெயும் சாப்பிடும் உப்புங்கூட வெளியூரிலிருந்து நமக்கு வருகிறதென்ருல் நமது வியாபார லட்சணம். இவ்வளவென்று தெரிந்து விடுகிறது. ஆகையினுல், கைத்தொழிலுடன் காலதாமதமின்றி வியாபாரத்தை நாடினுலொழிய நாம் விர்த்தியடைவது ஏலாத காரியம். அடிக்கடி காரியம் அபலப்பட்டுச் சித்தியடையாமற்போவதற்குக் காரணம் ஊக்கமின்மையாதலால், "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் மூத்தோர் வாக்கியத்தை முன்தள்ளி மேனுட்டாரைப்போல், ஜாதி சமயவித்தியாசமின்றி ஒருங்கு சேர்ந்து, முதல் இந்தியாவின் வர்த்தகத்தை விர்த்திசெய்தால்தான், இந்தியர்களாகிய நமக்குச் சீருஞ் சிறப்புங் கிடைக்கும்.

சுதேச பரிபாலினி.

சுவதேசிய முயற்சி.

நம் கவர்ண்மெண்டார் வங்காளநாட்டை இருபிரிவாகச்செய்துவிட்டனர். இது சர்வஜன சம்மதமில்லாமற் செய்த விஷயம். அதுபற்றி வங்காள நாட்டார் மனங்கொதித்துக்கொண்டிருக்கிறது. அக்கொதிப்பை ஒருவாருக வெளிக்காட்டி இனித் தாங்கள் அங்கிலநாட்டுச் சரக்குகளை வாங்குவதில்லையென்றும் சுவதேச சாமான்களை

உபயோகிக்கவேண்டுமென்றும் கட்டுப்பாடுபண்ணிக்கொண்டார்கள் பள்ளிப்பிள்ளைகள் எல்லோரும் ஆவேசங்கொண்டு அந்நியநாட்டுப் பொருள்களைத் தத்தம் தேகத்தினின்றும் கழற்றி எறிந்தனர். பல கூட்டங்கள் இது விஷயமாய்க்கூடித் தேசாபிமானத்தை மிக்க உற்சாகத்துடன் காட்டிவருகின்றனர். அவர்களைப் பார்த்துப் பம்பாய், சென்னை முதலிய நகரங்களிலுள்ளவர்களும் பெருத்த கூட்டங்கள் கூடி உள்நாட்டுச் சரக்குகளையே வாங்க வேண்டுமென்றும் அந்நிய நாட்டுச் சரக்குகளைக் கூடியவரை ஒழித்துவிட வேண்டுமென்றும் தீர்மானஞ்செய்து வருகின்றனர். இவ்விதத்தேசாபிமானம் பட்டணம் பட்டணமாய்ப் பரவிக்கொண்டு வருகின்றது. இன்னும் சில காலத்துக்குள் கிராமங்கள்தோறும் பரவுமென்பது திண்ணம். இது விஷயத்தில் சுதேசப்பத்திராதிபர்கள் மிக்கம் ஊக்கம்காட்டிவருகின்றனர். ஆங்கிலப் பத்திராதிபர்கள் பரிகாசம் செய்துவருகின்றனர். முதல் முதல் எவ்வித நன்மைமான காரியங்களைத் தொடங்கினாலும் கஷ்டமாகவே தோன்றும். பலர் பரிகசிப்பார்கள். பலர் இடையூறும் செய்வார்கள். அந்நியரைத் தவிர்த்து நம்மவருள்ளும் பலர் அலக்ஷியமாய்ப் பேசுவார்கள். ஊக்கத்துடன் உழைப்பவர்களை மனந்தளரும்படி செய்வார்கள். எவ்வாறிருப்பினும் நாம்செய்யவேண்டுவது ஒன்றுண்டு. அஃதென்னவெனில் ஊக்கத்தைச்சிறிதும் தளரவிடாமலிருப்பதே. சமுத்திரத்தின்கரையினின்று சமுத்திரமத்திக்குச்செல்லும் செம்படவர்கள் கட்டுமரம் ஏறிச்செல்லுங்கால் பலர் பார்த்திருக்கக்கூடும். பொங்கி எழும்பிவரும் அலைகள் அவர்களைப் போகவொட்டாமல் எத்துணை முறைதடுத்தும் அவர்கள்மேல் நீரைவாரி இறைத்தும் அவர்கள் இலட்சியம் பண்ணுமல் தள்ளிக்கொண்டு போகவில்லையா? அவ்விதமே நாமும் நீள நினைந்து நன்மை பயக்குங் காரியங்களைத் தொடங்கினால் "நன்மை கடைப்பிடி" என்ற நீதியைக் கைக்கொண்டு நடக்கவேண்டும். "உறுதி பயப்ப கடைபோகாவேனும் இறுவரைக் காறுமுயல்ப" என்ற நீதியை நாம் பற்றுக் கோடாகக் கொண்டு ஒழுகுதலே நம் கடமையாம். எக்காரியத்தையும் எண்ணித் துணியவேண்டும். துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கன்றோ. ஆகையால் யுத்தவீரன்போல் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் நம் சௌகரியங்களைச் சிறிதும் பாராட்டாமல் தேச க்ஷேமத்தையே

பெரும்பயனுகக் கருதி ஊக்கத்துடன் உழைத்து வருவதே தேசாபிமானிகளின் கடமை. பொது ஜன க்ஷேமமான காரியங்களில் நாம் தன்னயம் பாராட்டடி ஒழுகினல் பலருடைய் க்ஷேம லாபத்துக்கும் தேச க்ஷேமத்துக்கும் குறைவுநேரிடும். ஆதலால் எவர் எதைச் சொன்னுலும் லக்ஷியம் பண்ணுமல் "வைததனை இன்சொல்லாகக் கொள்வானும், நெய்பெய்த சோறென்று கூழைமதிப்பானும், கைப்பதனைக் கட்டியென்றுண்பானும் இம்மூவர் மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்" என்ற முதுமொழியைப் பின்பற்றிச் செல்லும் ஞானியைப்போல் நடந்து கொள்ளவேண்டும். உலகப்பொருள்கள் விஷயத்திலும் இவ்விதமே நடப்பது உத்தமம். இவை நிற்க. சுவதேசிய முயற்சியை நாம் கைக்கொள்வதால் நமக்கு நேரிடும் சாதகபாதகங்களைச் சிறிது சிந்திப்போம்.

(1) அந்நிய நாட்டுச் சரக்குகளை நாம் வாங்காமல் தீருமா? (2) நமக்கு வேண்டிய சரக்குகள் நம் நாட்டில் குறைவின்றிக் கிடைக்குமா? (3) அப்படிக் கிடைத்தாலும் அவை விலை சரசமாய்க்கிடைக்குமா? (4) நாம் செய்வதுபோல் நம் நாட்டுச் சரக்குகளை அயல் நாட்டார் வாங்காமல் நிறுத்திஞல் நமக்கு நஷ்டமில்லையா? (5) நமக்கு வேண்டிய சரக்குக்களை உற்பத்தி செய்து கொள்வதற்கு நம்மிடத்தில் போதுமான சாதனங்கள் இருக்கின்றனவா? என்பன முதலிய கேள்விகள் பிறக்கலாம். ஒவ்வொன்ருய் ஆராய்வோம். முதலாவது அந்நிய நாட்டுச்சரக்குகளை நாம்வாங்காமல் தீருமா என்பது? முற்றிலும் முடியாவிடினும் அநேகமாய் வாங்காமலே காலக்ஷேபம் செய்யலாம். மனிதனுக்கு இவ்வுலகில் வேண்டியவை சிலவே. அவைகளில் உண்டி, உடை, முக்கியமாம். இவைகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் நம்நாட்டில் ஏராளமாயிருக்கின்றன. சில வருஷங்களுக்குமுன் நம்முன்னேர் அயல்நாட்டுச்சரக்கின்றி ஜீவித்துவரவில்லையா? அவ்வாறே நாமும் ஜீவிக்கலாம். வேண்டுமானல் வெண்ணெய்யையும் மொத்தைபோல் நூற்கலாம். நாம்மட்டும் ஆடம்பரமான வாழ்க்கையை விரும்பாமல் சாமானிய வாழ்வைவிரும்பிஞல் எல்லாச்சௌகரியங்களும் உண்டு. இல்லாததைச் சௌகரியமாக உண்டுபண்ணிக்கொள்ளும்வரையிலாவது அவ்வாறு இருத்தல் நலம். அந்நியநாட்

டுணவுப்பொருள்களை நாம் சாப்பிடுகிறதில்லையென்றால் நாம் முன் வாழ்ந்த பரிசுத்தவாழ்க்கை அடைந்து திடகாத்திரத்துடனும் நீடித்த ஆயுளுடனும் சுகமாய் வாழ்வோம். பால்பெட்டியும் மெல்லின் ஸ்பூடும், பிஸ்கிட்டுகளும், சாராயங்களும், அந்நியநாட்டு மருந்துகளும், திராவகங்களும் நம்முட்சென்று அசுத்தப்படுத்தாது. பெரும்பாலும் வீண்டம்பத்துக்காகவே இவைகளை ஜனங்கள் வாங்கி உபயோகப்படுத்துகின்றனர். ஏழைகள் இவைகளின்றிச் சௌக்கியமாய்ச் ஜீவிக்கவில்லையா? அவர்கள் குழந்தைகள் திடகாத்திரமாய் ஓடி ஆடி உலாவுகிறதைப்பார்க்கிறோமே. ஆகையால் இவைகளைத் தள்ளிவிடுவதால் நம் சௌகரியம் குறையா. உடைகள் விஷயத்தில் என்றாலோ நம்நாட்டின்கண்ணே அநேகம் நெசவுயந்திரசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுத் துணிகள் நெய்யப்பட்டுவருகின்றன. அவைகள் சொற்பம் கரடு முரடாயிருக்கலாம். நாட்டுத்துணிகள் நயமாயிருந்தால் விலையதிகம் என்று யோசிக்கலாம். அவைகளுக்கு உபயோகப்படும் நயமான நூல்களும் அந்நியநாட்டிலிருந்தேவருகின்றன. என்றாலும் சிலகாலம் உள்நாட்டுத்துணிகளைக் கட்டிக்கொள்ளச் சம்மதிப்போமானால் கூடியசீக்கிரம் மற்றை நேர்த்தியான நூல்களையும் துணிகளையும் நெய்வதற்கு ஏற்பாடு செய்துவிடலாம். ஆகையால் தேசாபிமானம் ஒன்றுமட்டுமிருந்தால் இது சொற்ப அசௌகரியங்களை அசௌகரியமாகவே நினையோம். இன்றியமையாத பொருள்களைமட்டும் நாம் அந்நியநாடுகளிலிருந்து தருவித்துக்கொள்ளலாம். முற்றிலும் முதலில் ஒழிக்கவும் வேண்டாம். இரண்டாவது கேள்வி. நமக்கு வேண்டிய சரக்குகள் நம் நாட்டிற் குறைவின்றிக் கிடைக்குமா என்பது. அநேகமாய்க் கிடைக்கின்றன. இருப்பதே நம் சுகவாழ்வுக்குப்போதுமானது. அதிக சுகம் வேண்டுமானால் காலக்கிரமத்தில் முயற்சித்துத் தேடிக்கொள்ளலாம். மூன்றாவது கேள்வி. அப்படிக்கிடைத்தாலும் அவைசரமான விலைக்குக்கிடைக்குமா என்பது. தற்காலம் விலைசரசமாயிராவிடினும் கூடியசீக்கிரம் சரசமாக்கிவிடலாம். எல்லோரும் வாங்குகிறதென்றால் பலர்முயற்சிப்பார்கள். அதனால் சொற்பகிரையம் வைத்துக்கொண்டு வியாபாரிகள் சரக்கின்விலையைச்சரசப்படுத்திவிடுவார்கள். நான்காவது நாம்செய்வதுபோல் அந்நியர்கள் நம் சரக்கை வேண்டாமென்று நிறுத்தி

னுல் நமக்கு நஷ்டமில்லையா என்பது. இச்சரக்குகள் அவர்களுக் கின்றியமையாதவை. அவர்கள் தேசங்கள் நம்தேசம் போன்றதல்ல. அவ்வாறு வாங்காமல் நிறுத்தினுல் தேசத்துக்கு இப்பொழுது உண்டாகிற நஷ்டத்துக்குக் குறைவாகத்தான் நேரிடும். சில வியாபாரிகளுக்கும் கம்பெனிக்காரர்களுக்கு மட்டும் நஷ்டமாகும். ஜனங்கள் சௌகரியத்துக்கு அதனுல் அதிககுறைவு வராது. ஐந்தாவது நமக்கு வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்துகொள்வதற்கு நம்மிடத்தில் போதுமான சாதனங்கள் இருக்கின்றனவா என்பது. சாதனங்கள் பலவுண்டு. அவைகளைச் சரிவரத்தேடி உழைத்து நாம் உபயோகப்படுத்தவேண்டியகுறைவை மட்டும் நாம் நீக்கமுயலல்வேண்டும். ஆனுல் எல்லாவற்றிற்கும் வேண்டிய யந்திரங்கள் நமக்குக் கிடையா? அந்நியநாடுகளிலிருந்தே நாம் அவைகளைப்பெறல் வேண்டும். அம்மாதிரியான இயந்திரங்கள் செய்வதென்ருல் சொற்பகாலமாகும். ஆகையால் அப்படிப்பட்ட இன்றியமையா விஷயங்களை நாம் தருவித்துக்கொண்டு கூடியவரை நம் நாட்டுச் சரக்குகளையே உபயோகிப்போமாக? இத்துணை விஷயங்களையும் முடிப்பதென்ருல் போதுமான தேசாபிமானமும், ஊக்கமும், உழைப்பும், சுறுசுறுப்பும், ஜீவகாருண்யமும், ஒற்றுமையும், நம்பிக்கையும், நாணயமும், சத்தியமும் வேண்டும். அப்பொழுதே நம் காரியம்கைகூடும். அவையின்றி வீண்பேச்சுப்பேசி ஆரம்பசூரத்துவம்காட்டி நிறுத்திவிடக்கூடாது. அவ்வாறு செய்தால் நாம் பிறர்பழிப்புக்கும் அவமதிப்புக்கும், அவதூறுக்கும் உள்ளாவோம். ஆகையால் ஊக்கத்தைச்சிறிதும் தளரவிடாமல் உழைத்து நம் நாட்டுக்கு க்ஷேமத்தையும் பெருமையையும் தேடுவோமாக. "முயற்சி திருவினையாக்குமன்ரு." "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது திண்ணம். நம் உற்சாகத்தில் நாம் இராஜ விசுவாசத்தினின்று சிறிதும் வழுவாமல் நடந்துகொள்ளலே நம்முதற் கடமை.

பத்திராதிபர்.

சிருஷ்டியின் அற்புதங்கள்,

வெளிச்சம்வீசும் பூச்சிகள்.

மின்மினிப்பூச்சிகள்.

—:o.—

பூச்சிகளில் அநேகம் அற்புதமானவையுண்டு. அவைகளில் வெளிச்சம் வீசும் பூச்சிகள் சில இருக்கின்றன. இருட்டுக்காலங்களில் நாம் மரங்களிலும் மற்றுமுள்ள இடங்களிலும் மின்மினிப்பூச்சிகளைக் காண்கிறோம். வழியிற்செல்லும் பிரயாணிகளுக்கு அவைகள் சிறு நட்சத்திரங்கள்போல வெளிச்சம் சிறிதுகொடுக்கும் வண்ணம் சர்வதயாளுவான ஈசுவரன் அவைகளைச்சிருஷ்டித்திருக்கிறார். இவை போலவே இன்னும் சில ஒளிவீசும் பூச்சிகளிருக்கின்றன. இவைகளைப்பற்றிச் சிறிதுபேசுவோம். இப்பூச்சிகளுக்குப் பகற்காலத்தில் யாதொரு பிரகாசமுங் கிடையாது. சாதாரணப்பூச்சிகள் போலவே இருக்கும், இரவில் அவைகளுக்கு வெளிச்சம் எங்கிருந்துவருகின்றது. எப்படி அமைகிறது என்பதை இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கவில்லை. இப்பூச்சிகள் தூங்கும்போதும் அசைவறக்கிடக்கும்போதும் அவைகளின் பிரகாசம் மங்கியேயிருக்கும். மூச்சுவாங்கச் சுறுசுறுப்பாய் அவை அங்குமிங்கும் ஓடிப்பறந்து திரியும்போதுதான் அவைகளின் பிரகாசம் சரியாக நமக்குத்தோற்றும்.

ஆண் பெண் பூச்சிகள் கூடியிருப்பதற்கு அறிகுறியாகவும் அவைகள் வெளிச்சங்கொடுத்துவருமாம். ஒரு பெண்பூச்சி ஆண்பூச்சியின் வெளிச்சத்தைப்பார்த்தவுடன் தானிருக்கும்இடம் அதற்குத் தெரியும் வண்ணம் தானும்மின்னித் தன்னிடத்தை அது கண்டுவரும்படி செய்யும். அன்றியும் பூச்சிகள் தங்கள் பாதையைக்கண்டுபோக மின்னுகிற வழக்கமுமுண்டு.

தென்அமெரிக்காவிலுள்ள இந்தியர்கள் இராக்காலங்களில் பிரயாணஞ் செய்யும்போது தங்கள் கால்களிலும் கைகளிலும் மின்மினிப் பூச்சிகளைக் கட்டிக்கொள்வார்கள். நம்நாட்டில் தூக்கணங்குருவி தன் அழகிய கூட்டில் களிமண்ணை ஒட்டவைத்து இருட்டுக்கு வெளிச்சம் கொடுக்கும் விதம் மின்மினியை ஒட்டவைப்பது யாவரும்

அறிந்ததன்றே. நம்நாட்டுக்கவிகள் அனைவரும் இவ்விஷயத்தைப்பற் பல இடங்களில் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். "மேட்டிமைப் பன மின்மினி யாமெனக் கூட்டினுய்க்கும்" என்றார் கம்பரும். இவை நிற்க. அவ்விந்தியர்கள் இம்மின்மினிப்பூசிச்சியின் வெளிச் சத்திலேயே நூல் நூற்றும் தறிநெய்தும் கூத்தாடியும வருவார்கள். இவர்கள் இப்பூச்சிகளை வளர்க்கும் விதமும் அற்புதமே. இரும்புக்கம் பியினால் கூண்டுசெய்து அதில் அவைகளைப்பிடித்து விட்டுச் சொற்பம் சூடான தண்ணீர் கொண்டு அவைகளை நாள் ஒன்றுக்கு இரண்டு முறை குளிப்பாட்டிக் கரும்பைத் தின்னக்கொடுத்து வளர்ப்பது அவர்கள்வழக்கம். இதன்வெளிச்சத்தை நிறைக்கினி என்னும் ஒரு வகைக் காடிக்காரத்தின் ஒளிக்குச்சமமாகச் சொல்லுகிறார்கள். இப் பூச்சியில்மட்டும் ஏறக்குறைய 500 விதங்கள் இருப்பதாகக் கூறு கிறார்கள். அதில் சிலஐரோப்பாவிலுமுண்டு. ஆனால் பெரும்பா லும் இவ்வுஷ்ணதேசங்களிலே காணப்படுகின்றன. சிலஜாதிப் பெ ண்பூச்சிகள் வெளிச்சங்கொடுப்பதாயிருந்தாலும் ஆண் பூச்சிகளே சாதாரணமாய் வெளிச்சங்கொடுக்கும்.

II. கச்சோதம் அல்லது தீவர்த்திப்பூச்சி.

இப்பூச்சிகள் சிலசமயங்களில் சுடர்விட்டொளிரும். அதனால் அவைகளை மின்மினிமூட்டுப்பூச்சி என்று சொல்வார்கள். மின் மினிப்பூச்சிக்கு வெளிச்சம் அதன் உடலின் முன்பாகத்திலிருந்தே உண்டாகும். தீவர்த்திப்பூச்சிக்கு அதன் வயிற்றிலிருந்து ஒளி புற ப்படும். இப்பூச்சிகள் அமெரிக்கா தேசம் ஒன்றில்தான் ஏராளமா ய்க் காணப்படுகின்றன. அங்கிருக்கும் சில பூச்சிகள் பிரகாசமான பச்சைநிறச் சுடர்கள்விட்டுப் பிரகாசிக்குமாம்.

III. லாந்தர்ப்பூச்சி.

இச்சாதிப்பூச்சியும் உஷ்ணதேசங்களிலேதான்உண்டு. இவைக ளில் ஏறக்குறைய 20 வகைகள் உண்டு. பூச்சியின் தலையிலிருக்கும் ஒரு புடைப்பிலிருந்து அதற்கு வெளிச்சம் உண்டாவதாய்த் தெரிகி றது. சீனதேசத்தின் லாந்தர்ப்பூச்சிக்கு முகம் ஒடுங்கி நீண்டிருக் கும். சீனதேசத்து லாந்தர்ப்பூச்சி நீளத்தில் மூன்று அங்குலமும் அதன் சிறகுகளை விரித்துக் குறுக்காக அளவிட்டால் ஐந்து அங்குல

மூமாக இருக்கும். இது பொதுவாக மஞ்சள் நிறமுள்ள பூச்சி. சில இடங்களில் அது பச்சைநிறமும் பிரகாசமான செங்கல்நிறப் புள்ளிகளும் வரிகளும் பெற்று அழகாய்த் தோன்றும். சிறகுகளும் தவிட்டுநிறப்புள்ளிகளும் வரிகளும் வரைகளுங்கொண்ட மஞ்சள்நிற முள்ளனவாம். இப்பூச்சியின்கீழ்ச்சிறகுகள் ஒவ்வொன்றிலும் கண் வடிவமான பெரியபுள்ளி ஒன்றிருக்கும் அந்தப்புள்ளியின் ஓரமும் அதன் நடுவின் ஓர்பாதியும சிவப்பாயும் மறுபாதி வெண்மையாயும் தோற்றும். தலை ஒரு அங்குல நீளத்துக்கு வெளியே நீண்டிருக்கக் காணலாம். அவ்வாறு நீண்டிருக்கும் தலைதான் அதற்கு அவ்வளவு பிரகாசத்தைத் தருகிறதென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். இப்பூச்சிகளில் மூன்றுநான்கை ஒருகொம்பில்கட்டித்தீவர்த்தியாகப் பிரயாணிகள் உபயோகித்துவருவதுண்டு. ஒளிவிட்டுப்பிரகாசிக்கும் இப்பூச்சிகள் தாங்கள் அசைவின்றிச்சும்மாயிருக்கையில் சுடர்விட்டு ஒளிசெய்யா. இப்பூச்சிகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது யாதெனில் நாமும் நம்ஞான ஒளியைப் பிறர்பொருட்டுபயோகித்துதவவேண்டுமென்பதும் அவ்வாறு செய்வதில் நாம் இப்பூச்சிகளைப் போல் சுறுசுறுப்பாய்க் காரியங்களைச் செய்ய முயலவேண்டுமென்பதுமே. "யாருக்குத்தான் தெரியும் அவர் மகிமை யாருக்குத்தான் தெரியும்."

எஸ். சாமிநாதையர்.

சட்ட நிரூபண சபை எலக்ஷன்:—மிஸ்டர் கே. ஆர். குருசாமி ஐயர் அவர்களை 16க்கு மேற்பட்ட முனிசிபாலிடியார் பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்திருப்பதால் இவர்களே முனிசிபாலிட்டிக்கு பிரதிநிதியாகவும் மிஸ்டர் கிருஷ்ண நாயர் அவர்களைச் சில ஜில்லா போர்டார்கள் தெரிந்தெடுத்திருப்பதுடன் மிஸ்டர் கே. ஆர். குருசாமி ஐயர் அவர்கள் தமக்குக் கிடைத்த ஜில்லா போர்டுகளுடைய வோட்டுகளையும் நாயர் அவர்களுக்கே கொடுத்துவிட்டபடியால் அவர்களே ஜில்லா போர்ட் பிரதிநிதியாகவும் நியமனஞ் செய்யப்படுவார்கள் போலும்.

பத்திராதிபர்.

சைவபரிபாஷை.

(336-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஐதீகமுமுண்மையாகில் சப்தமே யென்பது சித்தம். அபாவமும் பிரத்தியக்ஷத்திற்கு வேறல்ல. எந்த இந்திரியத்தாலே யந்தப் பொருள் கிரகிக்கப்படுகின்றதோ அந்த இந்திரியத்தாலே அந்தப் பொருளின்மை யறியப்படுமாதலால் பரிசேஷமு மனுமானமே. அதாவது இந்தப்பத்துப்பேரில் திருடனிருக்கிறான் இவர்கள் ஒன்பது பேர் திருடரல்லரென்னில் இவன் திருடனென்பது நிச்சயமாகும்.

திருட்டு இவனிடத்தில்உள்ளது, எதிரேயிருக்கு மிவர்களுக்குள்ளே யிருந்துகொண்டு இவனன்றி மற்றவரிடத்தில்லாமையால் என்பது அனுமானமேயாகும்.

இப்படிப் பிரமாணங்கள் மூன்றே யென்பது நிச்சயம். இவற்றினுண்மை ஸ்வயமாகவே கிரகிக்கப்படும் தானேயுண்டாகும் அவ்விடத்து ஸ்வயமே கிரகிக்கப்படுதலாவது மனுகாலத்தில் மாறுமல் ஆச்சரிய முழுதும் கிரகிப்பதால் கிரகிக்கப்படுதலாகும்.

இவ்விடத்தில் பிரமாண்ணியத்தை கிரகிப்பது சாமக்கரியே ஞானத்தைக்கிரகிக்குமிடத்து ஞானம் விஷயத்தோடுகூடவே கிரகிக்கப்படும். விஷயமாவது விசேஷணம்

விசேஷியம் சம்பந்தம் ஆகையால்தான் குடத்தையே குடமாக அறிகின்றேனென்று அனுவியவசாயமுண்டாகிறது. ஆனால், நிச்சிதவிஷயத்திலதுகூடாதாகையால் பிரமாண்ணியத்தில் சம்சயம்வரக் கூடாதென்னில் நிச்சிதவிஷயத்திலும் ஞானம் தோஷத்தாலுண்டானதென்னும் சம்சயத்தால் பிரமாண்ணிய சம்சயம் வரக்கூடுமே.

ஞானமுண்டாகும்பொழுது தானேஉண்டாவதாவது சுவாசிரியத்தை முழுதுமறிவிக்கும் சாமக்கிரியாலுண்டாவது.

ஞானசாமக்கிரியாலுண்டாவதாயும் அதற்கு வேறானவேதுவினால் உண்டாகாததாயுமிருப்பதே ஞானத்திற்கு சுவயமாகவுண்டாகுந்தன்மை. ஆகையால் மற்றொன்றினாலுண்டாகும் ஞானமெல்லாம் பிரமையல்ல தானாகவேயுண்டாவது பிரமை என்பது சித்தம்.

இப்படி அதிவர்ணாசிரமாசாரியவரியராய் சைவபரிபாலகரான சிவாக்கிரயோகி செய்த சைவபரிபாஷை பிரமாண நிருபணமென்னும் முதல் பரிச்சேதம். முற்றியது.

இரண்டாவது பரிச்சேதம்.

மேல் பிரமேயம் நிரூபிக்கப்படுகின்றது. அது பதி பசு பாசம் என்னும் மூன்றுவிதமாகும் அவற்றுள், பசுக்கள் சுவதந்திரரல்லாமையால் பாசங்கள் அசேதனங்களாகையால் பதிபதார்த்தமுதலுத் தேசிக்கப்பட்டது.

இண்டாவது சேதநரார் தன்மையாகிய சாதிருசியத்தினலே பசு பதார்த்த முத்தேசிக்கப்பட்டது. கடைசியாயிருந்த பாசபதார்த்த முத்தேசிக்கப்பட்டதென்றறிக.

ஆனல் சுவாயம்புவத்தில் பதார்த்தங்கள் ஏழென்றும் பௌஷகர மதங்களில் ஆறென்றும், பார்க்கியத்தி லைந்தென்றும், ரௌரவத்தில் மூன்றென்றும் பதார்த்தங்களின் தொகை பலவிதமாயிருக்க இங்கெப்படி மூன்றேயென்றுறுதியாகச் சொல்லலாமென்னில் பசு பதி பதார்த்தமிரண்டு தவிர மற்றவையெல்லாம் பாசபதார்த்தத்திலடங்குமாதலால் பிரதானமாயிருப்பதால் மூன்று பதார்த்தமென்றது விரோதமில்லை.

அதில் பதி என்றதால், இந்திரனென்னுமிடத்து தேவேந்திரனென்றும் பாமை யென்னுமிடத்து சத்தியபாமை யென்றும் பொருள் கொள்வதுபோல நாம் ஏகதேசத்தில் நாமக்கிரகணமென்னு நியாயத்தால் பசுபதியென்று அரன் சொல்லப்படுகின்றான்.

சிருஷ்டி, திதி, சங்கார மென்னு மூன்று தொழில்களுக்கும் பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரன் கர்த்தாவென்று வேதம் ஆகமம் புராணங்களில் மிகுதியாக கேட்கப்படுகையால் இவ்விடத்தில் அரன் ஒருவனே பதியென்று எப்படி நிரூபிக்கப்படுகிறதென்னில்,

பிராகிருதமான சிருஷ்டி முதலான தொழில்களுக்கு கர்த்தாக்களாய் முக்குணங்களால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் மும்மூர்த்திகளுக்குள்ளே ருத்திரனெருவனே கர்த்தாவென்று சொல்லில் சங்கை செய்யவிடமுண்டு. இவ்விடத்து முக்குணங்களையுங் கடந்ததாய மும்

மூர்த்திகளுக்குங் காரணமாய ஸ்தூல சூக்கும சூன்னிய ரூபமற்றதாய சிதானந்த ரூபமாயிருக்கும் வஸ்துவை நாம் சொன்னேம்.

ஆகையால் பேர் குணம் கன்மமற்றதாயினுந்தபோதிலும் யோக விருத்தியினுலே பிரம விஷ்னு ருத்திரர் முதலான சகல சப்தங்களுக்கும் வாச்சியமாயிருக்கும் பரதத்துவமென்றிவ்விடத்து சங்கைக்கிடமில்லே. அப்படியே தேவிகாலோத்தரத்தில் லோகங்களுக்கெல்லா மோரேபந்துவான பரமேசுவரரானவர் ஸ்தூல சூக்ஷம ரூபமல்ல சூன்னியரூபமல்ல ஞானஸ்வரூபர் ஒருவராயிருந்தும் நாமபேதங்களால் வேறுபட்டிருக்கிறுர். பிரகத்தாகையால் பிரம்மாவென்றும் ஜகத் பிரபுவாகையால் விஷ்ணுவென்றும் ருக்கு அதாவது ரோகம் தாகம் அதைப்போக்குகின்றமையால் ருத்திரனென்றும் செல்லப்படுகிறுரென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸ்கந்தபுராணத்தில் சூதசம்ஹிதையில் விகற்பரகிதயாய ஞானந்த ஸ்வரூபமாய் இரண்டற்றதாயிருப்பது தத்துவம் பரமாத்மாவான சிவனுக்கு நாமரூபங்களில்லே. ஆகிலுமவருக்கு மாயையினுலே நாமரூபங்கள் கற்பிதமாயிருக்கும். சிவன், ருத்திரன், மகாதேவன், சங்கரன், பிரம்ம-தத்பிரம-விஷ்ணு-நாராயணன் முதலான நாமங்கள் பரமேசுவரரிடத்தில் பகுப்பிரயாசத்தில் யோகவிர்த்தியால் வர்த்திக்கும். முக்கியவர்த்தியால் வர்த்தியாவாகுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அந்தப்பரதத்துவத்தின் ஸ்வரூப லக்ஷணமாவது பசு பாசப் பிரமாணங்களாலறியக்கூடாதது. நின்மல நிரதிசய ஸ்வப்பிரகாச ஞானந்தஸ்வரூபவிபு-நித்தியம் ஸ்வதந்தரம் சிவம் என்பது அப்படியே ஸ்வயம்புவத்தில் அப்பிரமேயம், அனுர்த்தேசியம், அநௌபமியம், அனுமயம், சூக்ஷமம், சர்வகதம், நித்தியம், துருவம், அவியயம், ஈசுவரம், இந்தவிலக்கணம் அதற்கு வேருனவையை நீக்கியே சொன்னது மென்பது மங்கேயே சொல்லப்பட்டிருக்கிறது எப்படியென்னில்,

முடிவின்மையால்	அப்பிரமேயம்
குறிக்கப்படாமையால்	அநிர்த்தேசியம்
ஒப்பின்மையால்	அநௌபமியம்

நின்மலமாதலால் அநாமயம்
அறியக்கூடாமையால் சூக்ஷமம்
வியாபகமாதலால் ஸர்வகதம்
காரணமின்மையால் நித்தியம்
அசைவின்மையால் துருவம்
பரிபூரணமாதலால் அவியயம்
ஸ்வாமியார்கையால் ஈஸ்வரம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பார்க்கியத்திலும் பரமாத்மாவான சிவனுடைய ஸ்வரூபம் சித்துரூபமென்று சொல்லியிருக்கின்றது.

தேவிகாலேத்தரத்தில் உள்ளும் வெளியுமெல்லாம் ஆகாசம்போல் பரமானந்த ஸ்வரூபமாகக்காண்பவன ஆனந்தத்தைப் பெறுவானென்று சொல்லியிருக்கின்றது.

அசிந்தியத்தில் பரமான சிவானந்தமானது பிரத்தியக்ஷ அனுமான ஆகமப் பிரமாணங்களிலடங்காதென் றறியவேண்டும். அது ஸ்வசம் தேத்தியம் பரஞ்சோதி என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பஞ்சகிருத்தியஞ்செய்வது அவருக்கு தடஸ்தலக்ஷணமாகும். ஆனால் அனந்தேசுவராதிகளில் அதிவியாப்தி சொல்லக்கூடாது அவர்களும் அவருடைய அபிவியாக்தியால் பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்கிறார்கள். அவர்களும் இலங்கியங்களே யாவார்கள்.

அந்த பஞ்சகிருத்தியங்களாவன. சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரகம், இவ்வைந்துமாகும்.

அப்படியே மிருகேந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படிக்கொத்த பதியுண்டென்பதில் வேதாகமங்களும் அனுமானமும் பிரமாணமாகும்.

வேதாகமங்கள், பிரசித்தங்கள், அனுமானவாவது சப்தாதி தனுகரணாதியானவை கர்த்தாவுள்ளது காரியமாதலால் கடம்போல் பின்னும் ஜகத்தானது உபாதான சேதனகர்த்தாவுடன்கூடியது காரியமாதலால் கடம்போலவென்பதாம்.

(இன்னும் வரும்.)

புத்தகக்குறிப்பு.

தோல்காப்பியப் பாயிரவிருத்தி:—இப்பெயர்புனைந்த அரியஉரை மதுரைஜில்லா சோழவந்தான் அரசஞ்சண்முகனா ரியற்றப்பெற்றது. இவர் ஆண்டிற் சிறியராயினும் அறிவிற் பெரியரோ என்பதைப் பலருமறிவர். ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், கல்லாடர், நச்சினார்க்கினியர் முதலிய செஞ்சொல் நுண்தேர்ச்சிப்புலவர் அருமையாக உரை எழுதியிருப்பதில் சிற்சில பாகம் இப்புலவர் கருத்துக்கு ஒவ்வாமையால் தம் நுண்ணறிவுக்குத் தோற்றிய அரியபொருள்களை உலகத்தாருக்குப் புலப்படுத்துங் கருத்துக்கொண்டு தாமும் ஓர் உரை இயற்றி அதற்குச் சண்முகவிருத்தி எனப் பெயருமிட்டனர். அச்சண்முகவிருத்தியின் ஒரு பகுதியே இப்பாயிரவிருத்தி. இவ்வுரையில் இவர் பண்டைஉரையாசிரியர்களது கொள்கைகளைச் சந்தர்ப்பம் வாய்க்குந்தோறும் கௌரவமாகவே கண்டித்திருப்பதுமன்றி நன்னூலார் கருத்துக்களையும் சைவசிகாமணியாகிய ஸ்ரீமத் சிவஞானசுவாமிகளுடைய இலக்கணக் கருத்துக்களையும் பல இடங்களில் கண்டித்துப் பேசித் தம்மதத்தை நிலைநிறுத்தியிருக்கின்றனர். இவ்விதம் இவர் பெரியோர்களைக் கண்டித்திருப்பது நம்புலவர்கள் பலருக்கும் திருப்திகரமாயிராதெனினும் அவற்றிற்கெல்லாம் இவர் சிறிதும் அஞ்சாவண்ணம் தமக்கு உண்மையெனப் புலப்பட்டதை நிலைநாட்டுதலையே உயர்வாக உள்ளினவராகக் காணப்படுகிறார். இவரது கருத்துக்களினும் சிறிது தவறுகளிருந்தாலுமிருக்கலாம். எனினும் பல இடங்களில் இப்புலவர் காட்டியிருக்கும் புத்திநுட்பத்தை எவரும் வியவாமலிரார்.

இவரது வாசகநடை சொன்னயம், பொருள்நயம் செறிந்ததாய்ப் பரிமாக்கதிகொண்டு செல்லுகிறதை வாசிப்பவர் எவரும், இவரைப் புகழ்வதுந்தவிர இவரது திருக்குறளின் நுட்ப ஆராய்ச்சியையும் சங்கச்செய்யுள் ஆராய்ச்சியையும் சாஸ்திர ஆராய்ச்சியையும் பெரிதும் பாராட்டுவாரென்பது திண்ணம். சுருங்கச்சொல்லில் இவரைப்போல் நம்தமிழ்நாட்டில் தொல்காப்பியத்தை நுணுக ஆராய்ச்சி

செய்தவர் சிறுவிரல் வைத்தெண்ணக் கூடியவராகவே இருப்பார்கள். டெமி 250 பக்கங்களுக்கு மேலுள்ள இவ்வுரைநூல் தஞ்சை வித்தியாவிநோதினி அச்சுக்கூடத்தில் வெண்கடிதத்தில் அழகாய் அச்சியற்றப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூ 2.

சிறிதும் மனந்தளராமல் மேன்மேலும் இவருக்கு ஊக்கம் உண்டாகும் வண்ணம் நம் நாட்டுக் கனதனவான்கள் அனைவரும் இவரையும் இவர் நூல்களையும் ஆதரிப்பாராக. எல்லாம் வல்ல ஈசன் இப்புலவருக்குத் தேகசுகத்தையும் நீடித்த ஆயுளையும் தந்து பரிபூரண கிருபை புரிவாராக.

சக்ரவர்த்தினி:—இப்புதிய மாதாந்தரப் பத்திரிகை சென்னையிற் சென்ற ஆகஸ்டு மாதம் தோன்றி விளங்கி வருகின்றது. தமிழ்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியே இதன் முக்கிய நோக்கம். மாதர் விஷயமான பத்திரிகை தமிழில் "மாதர் மனோரஞ்சனி" "தமிழ் மாது" என இரண்டே இதுகாறுமிருந்து வருகின்றன. இனிச் சக்ரவர்த்தினி சேர்ந்து மூன்றாகும். பெண் கல்வி குறைவாயிருக்கும் இந்நாட்டில் மாதர்களுக்கென்று எத்துணை பத்திரிகை யுண்டானாலும் உத்தமமே. இதன் நடை எளிதாகவும் இனிதாகவுமிருக்கின்றது. மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "அரசனுங் குடிகளும்" என்ற விஷயத்தைப்பற்றிப் பெண்களுக்கேற்பச் சிறு வியாசம் ஒன்று எழுதியுள்ளார்கள். இதன் பத்திராசிரியராகிய மிஸ்டர் ஸி. சுப்பிரமணியபாரதியவர்களின் நன் முயற்சி மேன்மேலும் ஓங்கி வளரும் வண்ணம் திருவருளின் திருவடிகளைப்பிரார்த்திக்கின்றோம். நம் நாட்டுக் கனதனவான்கள் இதனை ஆதரிப்பார்களாக. ராயல் 24 பக்கம் கொண்ட இதன் வருஷ சந்தா ரூ இரண்டே.

பத்திராதிபர்.

சமாசாரக்கொத்து.

தீபேத்துவிஷயமாக ருஷியாவுக்கும் இங்கிலாண்டுக்கும் ஒரு பெரிய யுத்தம் நடக்குமென ஒரு ஜர்மானியப்பத்திரிகை கூறுகிறது.

* * *

லண்டன் நூதன காட்சி சாலையில் நிற்கும் வெள்ளை முயலொன்று ஈன்ற குட்டிகளுள் ஒன்றுக்கு இரண்டு தலையிருக்கின்றனவாம்.

* * *

லார்ட் மின்டோ அடுத்த நவம்பர்மீ 14உ இந்தியா வந்து சேருவார். இவரை எதிர்கொண்டு வரவேற்க லார்ட் கர்ஸன் நவம்பர்மீ 3உ யன்று பம்பாய் போய்ச் சேருவார்.

* * *

கனம் **கோபால கிருஷ்ண கோகலே** அவர்கள் சென்ற சனிக்கிழமை யன்று இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார். அங்கு 2மீ காலம் தங்கியிருக்கக்கூடும்.

ஆகஸ்மோதம் 23உ யன்று சூவேஸ் கால்வாயில் ஒருபெரிய மீன் அகப்பட்டது. இதனை அறுத்துப் பார்த்தபோது இதன் வயிற்றில் ஒருவனுடைய தலையும் இரண்டு கைகளும் காணப்பட்டன.

* * *

கடந்த மார்ச்சுமீ 3உயுடன் முடிந்த 3மீ காலத்திற்குள் இச்சென்னை இராஜதானியில் 23,220 கால் நடைப்பிராணிகள் மரணமடைந்திருக்கின்றன.

* * *

ஒரு கிரேன் நிறைகொண்ட பொன் இரண்டு லக்ஷம் பங்காகப் பிரிக்கப்படும். 8 அவுன்ஸ் பொன்னினால் உலகமுழுவதையும் சுற்றக்கூடிய ஒரு வெள்ளிக்கம்பிக்குப் பொற் பூச்சுப் பூசலாம்.

* * *

பம்பாயில் வேல்ஸ் இளவரசர் உபசரணை நிதியின்பொருட்டு 1,17,077 ரூபா சேர்ந்திருக்கிறது. அக்குபேரபட்டணத்துக்கு இஃது ஒரு பெருந்தொகையா?

* * *

கொண்டல்தேசத்து அதிபதியானவர் தம் உத்தியோகஸ்தர்கள் யாவரும் இந்தியாதேசத்தில் செய்யப்பட்ட சரக்குகளை வாங்கவேண்டியதேதவிர புறநாட்டுச் சரக்குகளை வாங்கக்கூடாதெனக் கண்டித்தனராம்.

சமாதான உடன்படிக்கையில் ருஷியச்சக்கிரவர்த்தியின் கையெழுத்து வாங்கும்படியாக மிஸ்டர் டி. விட்டியின் காரியதரிசி ஸெயின்ட் பீட்டர்ஸ் பர்க் போய்ச்சேர்ந்திருக்கிறார்.

*　　　*　　　*

பம்பாய் வார்ப்ஸ் தெருவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "ஸாஸூன்ஸ் பின்னிங் அண்டு வீவிங்கம்பெனி" யாரால் நேர்த்தியான மல் வஸ்திரங்கள் நெய்யப்படுகின்றன. கிளாஸ்கோ மல்லுக்குப் பிரதி அதைவாங்கலாம்.

*　　　*　　　*

திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்த ஆலப்புழையில் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் சோப்பும், மெழுகுவர்த்தியும் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகிறார்களாம். இது சிறந்த காரியமே.

*　　　*　　　*

சென்னையில் வாந்திபேதி நின்றபாடில்லை. சிற்சில பாகங்களில் குறைந்துவருகின்றதாம். என்றைக்கு இக்காலன் நம்மைவிட்டொழிவானோ அறிகிலோம்.

*　　　*　　　*

இந்தியாவிலுள்ள ஸ்டேட் ரெயில்வேக்களின் உபயோகத்துககாக இங்கிலாந்தில் ஒரு கம்பெனியாருக்கு 130 எஞ்சின்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

*　　　*　　　*

கிங் சார்ல்ஸ் என்னும் போர்த்துக்கேசிய ராஜன் 300 பவுண் நிறையிருக்கிறாராம். இவரைவிடக் கனமுள்ள ராசன் இவ்வுலகிலில்லையாம். கனம் என்பது தேககனத்தை மட்டும் குறிக்கும்.

*　　　*　　　*

பர்மின்ஹாமில் இருக்கும் குண்டூசித்தொழிற்சாலை உலகத்துள்ளவற்றிலெல்லாம் பெரிது. அதில் நாளொன்றுக்கு 3கோடியே 70இலட்சம் குண்டூசிகள் செய்யப்படுகின்றன.

*　　　*　　　*

விவாகமாகும்போது ஸ்ரீதனமாகத் தனக்குத்தன் கணவன் 11,000-ரூ கொடுப்பதாக வாக்களித்திருந்தும் அவ்வாக்குத் தத்தத்தை நிறைவேற்றாத காரணம் பற்றித்தன் கணவன்மீது ஒரு மகம்மதிய ஸ்திரீ கல்கட்டா ஹைகோர்ட்டில் தாவா செய்திருக்கிறாளாம்.

*　　　*　　　*

பார்டன் என்பவரால் 4000 பவுன் செலவழித்து முடிக்கப்பட்ட ஆகாயக் கப்பலானது அலக்ஸாண்டிராவிலிருந்து ஆகாய மார்க்கம் சென்றதாம்